பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්

28.10.2009 - மலர் 06, இதழ் 34




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரண்டாம் இராஜசிங்க மன்னனின் செயல்முறை

மன்னன் இரண்டாம் இராஜசிங்கனோ புதுமையான குணஇயல்புகளைக் கொண்டவன். யார் மீதும் நம்பிக்கை இல்லாதவனாக காணப்பட்டான். அனைவரையும் பயத்துடனும் சந்தேகத்துடனும் வாழச் செய்தான். தமது குடிகள் ஒல்லாந்தருடன் வர்த்தகம் செய்வதை தடை செய்தான்.

இந்நாட்டிற்கு வந்த சகல அந்நியர்களையும் மீண்டும் செல்வதற்கு இடமளிக்கவில்லை. அவர்களை நிறுத்தி வைத்தான். ஒரு சந்தர்ப்பத்தில் தமது குடிகள் நிலத்தில் விவசாயம் செய்வதற்கும் இடமளிக்கவில்லை. பயனற்ற கைத்தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தினான். அந்நியப் படையினரையும் ஒற்றர்களையும் தமது பாதுகாப்பிற்காக பயன்படுத்தினான். காவலர் தொகையை அதிகரித்தான். வரக்கூடிய சதிகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதே அவனின் நோக்கமாக இருந்தது.

மன்னனுக்கு நஞ்சூட்டுவதற்கு ஒரு பிரிவினர் முயற்சித்தனர். அவர்களைக் கைது செய்தான். வழக்குத் தொடுத்தான். அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டனர். அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களின் உறவினர்களுக்கும் தண்டனை வழங்கினான். இதற்கிடையில், மன்னனின் குரூரச் செயல்கள் குறித்து சிந்திப்பதற்கு மக்களுக்கு அவகாசம் இருக்கவில்லை. அவர்களை தொடர்ந்தும் பயனற்ற காரியங்களில் ஈடுபடுத்தியமையே இதற்குரிய காரணமாகும்.

குடிகள் கொண்டு வரும் அன்பளிப்புகளை சந்தேகக் கண்கொண்டு பார்த்தான். பிரதானிகளின் பெரும் முயற்சியாலும் கடின உழைப்பாலும் சேகரித்த அறுவடைகள் களஞ்சியங் களில் வீணே அழிந்து போகஇடமளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத பாடசாலை விடுமுறைக்கு முன்னர் பாடநூல்கள் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்



2010 ஆம் ஆண்டுக்கான இலவச பாட நூல்களை விநியோகிக்கும் பணிகள் தற்போதளவில் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வருடத்துக்கான பாடநூல்கள் மாகாணமட்டத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள பாடநூல்களின் மொத்த எண்ணிக்கை 15,922,149 ஆகும். அது நூற்றுக்கு 59% எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், எதிர்வரும் வருடத்துக் கான சகல பாடநூல்களும் இவ்வருடத் தின் டிசம்பர் மாத பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக மாணவர் களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கான சகல நடவடிக்கைகளும் இப்போதே திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:

# பிரதான பாடசாலை அனுமதிக்கான விண்ணப்பங்கள் 30 ஆம் திகதி அதிபர்களுக்கு அனுப்பப்படும்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர் களை பிரதான பாடசாலைகளில் தரம் 6 இற்கு அனுமதித்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 30 ஆம் திகதி அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதியளவில் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட வுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப் படுகின்ற விண்ணப்பப்படிவத்தை தவிர, அதற்குப் பதிலாக வேறொரு விண்ணப் பப்படிவத்தைப் பயன்படுத்தியிருப்பின் அது நிராகரிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அதிபர்கள், அவற்றை எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்க வேண்டும் எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

### 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். **ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம்.** இதற்காக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

## விலங்கினக்காட்சிசாலைக்கு

# பொலித்தீன் உறைகள் எடுத்துச் செல்லத் தடை

*தெஹிவளையில் அமைந்துள்ள விலங்கினக்காட்சிசாலைக்கு (Zoo) பொலித்தீன் உறைகளை எடுத்துச் செல்வது இம்மாதம் 15 ஆம் திகதியி லிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. விலங்கினங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தின் அடிப்படையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக விலங்கினக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.*

*விலங்கினக்காட்சிசாலைக்கு வருகின்ற பார்வையாளர்களில் பலர் அங்குள்ள விலங்கினங்களுக்கு பொலித்தீன் உறைகளுடன் உணவுகளை வழங்குகின்றனர். இதன் போது, அந்த உணவினை உறைகளுடனேயே விலங்குகள் உட்கொள்கின்றன. இதனால், கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலான விலங்குகள் நோய்வாய்ப்பட்டன. அண்மையில் தெஹிவளை விலங்கினக்காட்சி சாலையில் உயிரிழந்த 'டேபியர்' வகையைச் சேர்ந்த விலங்கின மொன்றின் உயிரிழப்பிற்கும் இதுவே காரணமாக அமைந்துள்ளது. இந்த விலங்கினத் தின் உயிரிழப்புக் கான காரணத்தை ஆராய்ந்தபோது, பொலித்தீன் உறையுடன்கூடிய உணவுகள் உட்கொள்ளப்பட்டதனாலேயே மரணம் சம்பவித்துள்ளது என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. பொலித்தீனை உணவாகக்கொண்டதன் காரண மாக கடந்த காலங்களில் மான்கள், மரைகள், குரங்குகள் போன்ற விலங்குகள் உயிரிழந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*



# நினைவுத்திறனை அதிகரிக்கும் 'தொப்பி'

நம்மில் பலருக்கு மறதிக் குணம் இருக்கின்றது. இதனாலேயே பல்வேறு பிச்சினைகள்,சிக்கல்களுக்கு முகம்கொடுத்த அனுபவ மும் சிலருக்கு இருக்கலாம். இவற்றுக்குத் தீர்வு காணும் விதமாகவே நினைவுத் திறனை அதிகரிக்கக்கூடிய தொப்பி உருவாக்கப்பட் டுள்ளது. இது 'திங்கிங் கெப்' என அழைக்கப்படுகின்றது.


இந்த தொப்பியை அணிந்து கொண்டால், மூளைத்திறன் அதிக ரிக்கப்பட்டு ஏராளமான விடயங் களை அறிந்துகொள்ளவும் மறந்து போன விடயங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரவும் முடியும் என்று கூறப்படுகின்றது.



பிரித்தானிய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் சிலர் நினைவாற்றல், மறதிக்குணம் என்பன தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை நடாத்தி, இந்த தொப்பியை உருவாக்கி உள்ளனர்.

இந்த தொப்பியின் செயற் றிறனை பரிசோதிக்கும்நோக்கில், இவர்கள் ஓர் ஆராய்ச்சியை நடாத்தி யுள்ளனர். அதற்காக 30 பேரைத் தெரிவுசெய்து, அவர்களை சாதாரண கணினி விளையாட்டுக் களிலும் கற்றல் போன்ற துறைகளி லும் ஈடுபடுத்தியுள்ளனர். பின்னர், அவர்களை இரு பிரிவுக்குட்படுத்தி, அவர்களில் பாதிப்பேருக்கு நினைவுத்திறன் தொப்பியை அணி வித்தும் ஏனையோருக்கு நினைவுத் திறன் தொப்பியை அணிவிக்காம லும் ஏற்கனவே செய்த வேலை களில் ஈடுபடுமாறு பணித்துள் ளனர். அதன்போது, நினைவுத் திறன் தொப்பியை அணிந்தவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணிகளில் சிறப்பாக ஈடுபடுவதையும் கணினி விளையாட்டில் அவர்களின் திறன் முன்னரைவிட அதிகரித்திருப் பதையும், அத்தொப்பியை அணியாதவர்கள் தமது வேலைகளில் தளர்வினைக் காட்டுவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.






அதன்படி,'திங்கிங் கெப்' ஆனது எண்ணத் தூண்டலுக்கான காந்த அலைகளை மூளையின் 'கோர்டெக்ஸ்' பகுதிக்குக்கொண்டு செல்கிறது. இதன்மூலம் நமது எண்ணங்கள் விடுபடாமல் மூளையை சென்றடைந்து, குறித்த பணியை செவ்வனே நிறைவேற்ற துணை புரிகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர்களின் உபகரணங்கள்

**பண்டைய காலம் முதல் இன்று வரையில் எமது நாடு விவசாயத்திற்கு முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. விவசாயம் எனும்போது நெற்செய்கை முதலிடம் பெறுகின்றது**

நெல் பயிரிடலில் அறுவடை முக்கியமாக அமைகின்றது. அறுவடையின்போது இன்று நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தப்பட்டாலும் முன்னோர் வயலில் இருந்து அறுவடை செய்துகொண்டு வந்து குவிக்கும் இடமான 'களம்' அல்லது கமத முக்கியம் பெறுகின்றது.

அந்த அறுவடையை பெற முன்னர் சில சம்பிரதாயங்கள், மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதை மறக்கமுடியாது. வயலின் ஓர் ஓரத்தில் வெட்டி எடுக்கப்படுகின்ற வேளாண்மையை குவித்து மாடுகளைப் பூட்டி நெல்லை அறுவடையாக பெறும் இடம் புனிதமான இடமாகக் கருதப்பட்டு வருகின்றது. அந்த இடம் 'களம்' என்றும் சிங்கள மொழியில் 'கமத' என்றும் அழைக்கப்படுகின்றது.

அறுவடையை புனிதமாக கருதுவதால் அதனை குவித்து நெல் மணிகளாக பெறும் இடமும் புனிதமானதென முன்னோர் கருதினர். இந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களுக்கும் அன்றைய சமூகத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

அறுவடை செய்யும்போது விவசாயிகள் கூட்டாக பாடல்களை இசைத்தவாறே பணிகளில் ஈடுபடுவார்கள். அதில் "இந்த களம் யாருடையதோ, கடவுளின் களம் இதுவே" என்று பாடுவது மரபாக இருந்து வந்திருக்கின்றது.

விவசாயமும் நெற்செய்கையும் இறுதியில் பெறும் அறுவடையும் இறைவனின் அருட்கொடையாக அவர்கள் மதித்ததை இந்தப் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன. இவற்றை நாம் சிங்கள, பௌத்த கலாசார மரபுகளில் அவதானிக்கலாம்.

தரையில் அமைந்த களம், கற்பாறை களம், வயல் களம் என்றவாறு மூன்று விதமான களங்கள் அமைத்திருந்தனர். இதில் நெல்லை அறுத்து நீண்ட தூரம் சுமந்து (வேளாண்மையை கட்டாகக் கட்டி) செல்ல முடியாததால் தமது வயலில் ஓரிடத்தில் களத்தை அமைத்துக்கொண்டனர். ஆனாலும், அவை ஏனைய வயல் சொந்தக்காரர்களுக்கும் பொது இடமாகக் கருதப்பட்டது. ஏனைய வயல் சொந்தக்காரர்களும் தமது வேளாண்மையை அந்த இடத்தில் குவித்து அறுவடையை நிறைவு செய்துகொள்ள முடியும்.

இந்த அறுவடை பூர்த்தி நடைபெறும் இடமான களம் புனிதமாகக் கருதப்பட்டது. அதன் குறுக்கே எவரும் செல்ல முடியாது. அத்துடன், பாதணிகளுடனும் அந்த இடத்தைக் கடக்கக்கூடாது. அதன் நடுவில் புதைக்கப்பட்டுள்ள சங்கையும் யாரும் மிதிக்கக்கூடாது.

அதேபோன்று தொற்று நோய்களுக்கு உள்ளானவர்களும் சுத்தம் இல்லாத நிலையிலும் எவரும் இந்த களம் என்ற இடத்திற்கு செல்லக் கூடாது என்ற கட்டுப்பாட்டுகள் காணப்பட்டன. அறுவடை நடைபெறும்போது 'வெல்விதானே பிரதானி' அங்கு முக்கிய இடம் வகித்து அறுவடைக்கு தலைமை தாங்கி அதனை நடத்தி வைப்பது மரபாக இருந்துவந்தது.

இந்த அறுவடையின்போது பயன்படுத்தப்பட்ட உபகரணம் முக்கியமாக வேளாண்மையை குவித்து அதன்மேல் ஆறு அல்லது எட்டு எருதுகளைப் பூட்டி வலம் வருவதாகும். அப்போது மாடு மிதிக்கையில் நெற்கதிர்கள் உதிர்கின்றன. இதனை சூடடிப்பதாக கூறுவார்கள். அததுடன், இந்த செயற்பாடுகளுக்காக உபயோகப்படுத்தும் நெல் வைக்கோலை உதறும் உதர் கம்பு, கை இழுவை கூட்டுமாறு, சுளகு ஆகிய உபகரணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அத்தோடு, அறுவடை முடிந்தவுடன் நெல்லை அளந்து பங்கிடும் பெட்டி அல்லது கூடை முக்கியம் பெறுகின்றது. இதனை புசல் அல்லது 'இலாச்சம்' என்று அழைக்கின்றனர். அறுவடை முடிந்த பின்னர் இந்த உபகரணங்களை விவசாயி தனது வீட்டில் மிகவும் பக்குவமாகவும் பாதுகாப்பாகவும் புனிதமாகவும் கருதி பேணிப் பாதுகாப்பதும் மரபாக இருந்து வருகின்றது.

இன்று நவீன தொழில் நுட்பம் இணைந்ததால் மாடு பூட்டி சூடடிப்பது, களம், விவசாய உபகரணங்கள் என்பன எமது தலைமுறையினர் அறியாத ஒன்றாக நடைமுறையில் இருந்து மறைந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

**உபகரணங்கள் சில...**



## எங்கும் போகக்கூடிய சாதனம்

மனிதன் இன்று எங்கும் எதிலும் ஆய்வுகளைச் செய்வதில் தம்மை தீவிரமாக ஈடுபடுத்தியுள்ளான். இதனால், பல புதிய தகவல்களையும் அற்புதமான கண்டுபிடிப்புகளையும் உலகிற்கு வழங்கி வருகிறான்.

இந்த வகையில், மனிதன் ஆய்வு செய்ய விரும்பும் காட்டுப்பகுதிகள் பலவற்றிற்கு மனிதனால் உட்புகமுடியாதுள்ளது. அதேபோல், உயரமான மலைப்பகுதி மற்றும் நீர்வீழ்ச்சி ஆகியவற்றிற்குச் சென்று ஆராய்ச்சி செய்வதும் பெரும் கடினமான பணியாகும். இத்தகைய கடினமான பிரதேசங்களுக்குச் சென்று ஆய்வு செய்வதற்கென்றே பிரான்ஸ் நாடு புதியதோர் சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளது. காற்றடித்த நட்சத்திர வடிவக் குழாய்களே அவைகளாகும். இவற்றை இதற்கென உள்ள விசேட 'ஹெலிகொப்டர்' மூலம் காலியாக மலைகள், அருவிகளின் உயரமான பகுதிகளுக்கு எடுத்துச் சென்று அங்கேயே அவற்றுக்கு காற்றடித்து இந்த குழாய்கள் மேல் அமர்ந்தபடியே கீழிறங்கி ஆராய்ச்சிகளைச் செய்யலாம். இந்த நட்சத்திரக் குழாய்களைப் பிரித்து முக்கோணம் போல் தனித்தனியாகவும் தமது பணிகளைத் தொடரலாம். தேவைப்படாத நேரத்தில் இதனை மடித்து வைத்துக்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................

முகவரி:....................

....................

பாடசாலை:....................

வகுப்பு:....................

திகதி:....................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் அதிக வெப்பமுடையதாக இருப்பதன் காரணம் என்ன?

சூரியன் ஏன், எவ்வாறு இந்தளவிற்கு வெப்பமாக இருக்கின்றது? என்ற கேள்விகள் நீண்டகாலமாகவே விஞ்ஞானிகள் மத்தியில் பரவலாக எழுப்பப்பட்டு, ஆய்வுகளுக்கு இலக்காகி வந்தன. அதன் விளைவாக கிடைத்த தகவலின்படி, சூரியனின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தைவிட அதிக வெப்பம் சூரியனைச் சூழ உள்ள வளிமண்டலத்தின் மேலே உள்ள பிரதேசத்தில் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் 5700$^{0}$K (கெல்வின்) அளவு வெப்பநிலை காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அதாவது, 9800$^{0}$F ஆகும். அத்துடன், சூரியனுக்கு மேலாக, வானில் 'கொரோனா' என அழைக்கப்படும் பிரதேசத்தில் பத்து லட்சத்திற்கும் அதிக பாகை கெல்வின் வெப்பம் காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

நாஸா நிறுவனத்தின் 'கொடாட்' விண்வெளிச் சுற்றுலா மத்தியநிலையத்தின் ஜேம்ஸ் க்ளீமிடுக் உள்ளிட்ட விஞ்ஞானிகள் குழுவினரே, இது குறித்து பல புதிய ஆய்வுகளை நடத்தி, பல கண்டுபிடிப்புகளை மேற்கொண்டவர்களாவர். சூரியனைச் சூழ



மேல்வானில் ஏற்படும் 'நெனோஃப்ளெயார்' செயற்பாடுகள் அதற்கு உச்ச வெப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேல்வானில் திடீரென நிகழும் மிகச்சிறிய வெப்ப மற்றும் சக்தியின் வெடித்துச் சிதறலையே 'நொனோஃப்ளெயார்' செயற்பாடு என அழைக்கின்றனர். இவ்வாறான மிகச்சிறிய சக்தி வெடிப்புகள் பெருந்தொகையாகவும் அடிக்கடியும் ஏற்படும்போது அதிக வெப்பம் உற்பத்தியாவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். சூரியனின் மேற்பரப்பில் 5700$^{0}$K அளவு வெப்பம் நிலவுவதற்கும் சூரியனுக்கு மேல் வானில் பத்து லட்சம் பாகை கெல்வின் அளவு வெப்பம் நிலவுவதற்கும் இந்த 'நெனோஃப்ளெயார்' செயற்பாடே காரணமாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## விண்வெளியின் 'கண்' புதுப்பிக்கப்பட்டது

விண்வெளியில் காணப்படுகின்ற விண்மீன் கூட்டங்களையும் கிரகங்களையும் மிக ஆழமாக ஆய்வு செய்வதற்காக நாஸா நிறுவனத்தின் மூலம் மிகச் சக்திவாய்ந்த விண்வெளித் தொலைநோக்கி ஒன்று 2003 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. அதுதான் 'ஸ்பிட்சர்' என்று பெயரிடப்பட்ட விண்வெளித் தொலைநோக்கியாகும்.



இது நாஸாவின் விசேட விண்வெளி தூரநோக்கி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தொலைக்காட்டியில் அதி தொழில்நுட்பம் வாய்ந்த பிரிவுகள் பல உள்ளன. அத்துடன், மிகச் சக்தி வாய்ந்த-தீர்க்கமாக அவதானிக்கக்கூடியதும் 'விண்வெளியின் கண்' என்று சிறப்பித்துக் கூறத்தக்கதான 'கெமரா' ஒன்றும் இதில் காணப்படுகின்றது. இந்தக் கெமராவானது தொடர்ந்து ஐந்து வருடங்களாக விண்வெளிக் காட்சிகளைப் படம் பிடித்து புவிக்கு அனுப்பிய வண்ணம் உள்ளது. எனவே, இதனைப் புதுப்பிக்க வேண்டிய தேவை நீண்டகாலமாக உணரப்பட்டதை அடுத்து, அண்மையில் அந்த நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.


## சுப்பர்நோவா


விண்மீன்கள் பல வெடித்துச் சிதறுவதுண்டு. அவ்வாறு வெடித்துச் சிதறும் விண்மீன்களே 'சுப்பர்நோவா' என்று அழைக்கப்படுகின்றன. இவை தமது ஆயுட்காலம் முடிந்தவுடன் வெடித்துச் சிதறி அழிந்து போகின்றன. நமது சூரியனைப் போல் சுமார் 20 மடங்கு பெரிய




விண்மீன்களே இவ்வாறு வெடிப்புக்குள்ளாகின்றன.

விண்மீன்களின் ஆயுட்கால முடிவில் அதனுள் இருக்கும் அணுக்கருக்களில் வினைகள்-எதிர்வினைகள் நிகழ்ந்து அவற்றின் விளைவாக, அவை மிகுந்த ஒளியுடன் வெடித்துச் சிதறுகின்றன. சுப்பர்நோவாக்கள் விண்வெளியில் விரல்விட்டு





எண்ணக்கூடிய வகையில்தான் உருவாகியுள்ளன. கடந்த 2000 ஆண்டுகளில் 6 சுப்பர் நோவாக்கள் மட்டுமே உருவானதாக நம்பப்படுகின்றது. அவற்றில் ஐந்து மட்டுமே நன்றாகத் தெரியக்கூடியதாக இருந்தன.

கி.பி 1006 இல் தென்வானில் மிகுந்த ஒளியுடன் சுப்பர் நோவா ஒன்று தோன்றியது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பகலிலும் இரண்டு ஆண்டுகள் இரவிலும் தெரிந்த அந்த சுப்பர்நோவாவின் நிழல்கூட புவியில் விழுந்ததாகக் கூறப்படுகின்றது. கி.பி 1054, 1575, 1604 ஆகிய ஆண்டுகளிலும் சுப்பர்நோவாக்கள் தோன்றின. 1987 இல் பூமிக்கு அருகே தோன்றியுள்ள சுப்பர்நோவாவுக்கு 'ஷெல்டன் 1987 ஏ' என்று பெயரிடப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி கெனடா நாட்டு விஞ்ஞானி ஒருவரால்தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.





## இவ்வாறுதான் 'டிஸ்கவரி' பயணிக்கின்றது

எதிர்வரும் விண்வெளிப் பயணங்களின்போது 'டிஸ்கவரி' ஓடத்தை சுமந்துகொண்டு விண்வெளிக்குச் செல்வதற்கு ரொக்கெட் ஒன்றிற்குப் பதிலாக, போயிங் 747 விமானமொன்றைப் பயன்படுத்துவதற்கு நாஸா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, அதற்கான பரீட்சார்த்த வேலைகளையும் பரீட்சார்த்த பயணங்கள் பலவற்றையும் கடந்த சில நாட்களாக நாஸா மேற்கொண்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு கரையோரத்தில் கெலிஃபோர்னியாவில் அமைந்துள்ள 'எட்வர்ட்' விமானப்படை முகாமில் இருந்து கிழக்கு கரையோரத்தில் உள்ள ஃப்ளோரிடா மாநில 'கென்னடி' விண்வெளி மத்தியநிலையம் வரையிலான பகுதிகளுக்கிடையே போயிங் 747 விமானத்தைப் பயன்படுத்தி இந்த பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விண்வெளி ஓடத்தைப் பின்னால் சுமந்தவாறு லூசியானா மாநிலத்தில் இரண்டு நாட்களாக நடைபெற்ற பரீட்சார்த்த பயணத்தின்போது, கடும் புயலுடன்கூடிய காலநிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்ததாகவும் அச்சந்தர்ப்பத்தில் விமானம் நல்ல முறையில் இயங்கியதோடு, அதனை சிறந்த முறையில் கையாளக்கூடியதாக இருந்ததாகவும் நாஸா பேச்சாளர்கள் தெரிவிக்கின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீன வரலாற்றின் தோற்றத்தை உறுதிபடக் கூறமுடியாது. ஆய்வுகளின்படி சீனாவின் பிராக் வரலாற்று காலகட்டம் கி.மு 600,000 ஆகவோ கி.மு 200,000 ஆகவோ இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. நைல், யூப்ரஸ், டைகரஸ் நதிக்கரைகளில் நாகரிகங்கள் தோன்றியதைப் போன்று சீனாவின் நாகரிகம் 'ஹொவாங்கோ' நதிக்கரையில் ஆரம்பித்திருந்தது. இந்த 'ஹொவாங்கோ' நதி இன்று மஞ்சள் நதி என்றழைக்கப்படுகின்றது. ஹொவாங்கோ எனும் சீன நாகரிகம் பற்றி பழங்கதைகளின் ஊடாகவும் புராதன நினைவுச் சின்னங்களின் ஊடாகவும் காணமுடிகின்றது**

## குடியிருப்புகள் தோன்றிய விதம்

'ஹொவாங்கோ' எனும் மஞ்சள் ஆறு பெருக்கெடுக்கும்போது கரைப்பகுதிகள் செழிப்படைகின்றன. மக்கள் இந்த பகுதிகளில் குடியேறிய பின்னர் விவசாய நடவடிக்கைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு செயற்பாடுகள் அதிகரித்தன. சீன நாகரிகத்தின் தோற்றத்திற்கு வேறு எந்த நாகரிகமும் முன்னுதாரணமாக இருக்கவில்லை. அத்துடன், சுயாதீனமான வளர்ச்சி நிலையை எய்தி இருந்தது. இதனால், அதன் மாற்றங்கள் மிகவும் மெதுவாகவே இருந்தன.

கி.மு 1800இன் போது நதிக்கரையில் கிராமங்கள் தோன்றியதற்கான சான்றுகள் உள்ளன. அங்கு கிராமிய மக்கள் விவசாய நடவடிக்கைகளுக்கும் அன்றாடப் பணிகளுக்கும் நீரைப் பெற்றுக் கொண்டதும் இந்த மஞ்சள் ஆற்றில் என்பது குறிப்பிடத் தக்கது. நதியில் போக்குவரத்து சேவைகளும் ஆரம்பித்தன. மீன்பிடித் தொழிலும் அவர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது.

## சீனாவின் மூதாதையர்கள்

பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் மூதாதையர்கள் கையுவான், லென் தியென், பீக்கிங் ஆகிய பெயர்களில் அழைக்கப்படும் வானர மானுடர்களாவர். இவர்கள் தொடர்பான சான்றுகள் யுனான், ஹோனான், ஹோப்பேய் ஆகிய மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. பீக்கிங் மானுடர்கள் கி.மு 400,000 காலப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் பிரகாரம் சீனாவின் புதிய நாகரிக யுகம் பற்றிய தகவல்கள் ஹோனான் மாகாணத்தில் யங்ஷாஹோ, ஷங்துன், லுங்ஷன் மற்றும் ஜியங்சு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது அறியப்பட்டுள்ளன. புதிய நாகரிகத்தில் வாழ்ந்த சீன மனிதர்கள் வேட்டையாடுதல் தொடக்கம், விலங்குகளை வளர்க்கவும் விவசாயம் செய்யவும் தொடங்கியதாக இந்த சான்றுகளின் ஊடாக தெரியவருகின்றது.

## சீன இலக்கியம்

சீன இலக்கியங்கள் கி.மு3000 ஆம் ஆண்டில் வடக்குப் பகுதியின் நதிக்கரையில் விவசாயத்தை முதன்மையாகக் கொண்டு உருவாகிய கிராமத்தில் தோன்றியதாக தெரியவந்துள்ளது. உலகின் பிற நாகரிகங்களின் வரலாறுகளைப் பார்க்கையில் இந்த காலப்பகுதி மொசப்பத்தேமியா, நைல் மற்றும் இந்து நதிக்கரை நாகரிகங்களின் தோற்றுவாய் காலப்பகுதியுடன் சமகாலத்தன்மை கொண்டதாகும். புதைபொருள் அகழ்வாராய்ச்சி தகவல்களின்படி இந்தக் காலப்பகுதி புதிய நாகரிகக் காலப்பகுதியாகும். இங்கு வாழ்ந்த ஆரம்பகால விவசாயிகள் களி மண் வீடுகளில் வசித்துள்ளார்கள். பண்டைய காலம் தொட்டு நிறமூட்டப்பட்ட களிமண் மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் அவர்களுக்கிருந்துள்ளது. மூதாதையர்களை வணங்குவதே அவர்களின் மதமாகும். விலங்குகளின் எலும்புகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தை வெளிப்படுத்தும் ஆற்றலும் அவர்களின் மதத்தலைவர்களுக்கு இருந்தது.

## பெரும் தத்துவஞானி கொன்பியூசியஸ்

மேற்கிலிருந்து வந்த ச்செள எனும் ஆக்கிரமிப்பாளர்கள் 'ஷாங்' ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி 800 ஆண்டுகள் சீனாவை ஆட்சி செய்தனர். இந்த காலப்பகுதியில் தத்துவவியலாளர்கள் அவர்களின் தத்துவங்களை விளக்கி போதனைகள் நிகழ்த்திக் கொண்டு உயர்குடி வம்சத்தவர்களின் சபைகளுக்கு சென்றனர். இவர்களில் மிகவும் மூத்தவராக குங் புட்சு எனப்படும் கொன்பியூசியஸ் கருதப்பட்டார்.

அவர், கி.மு 550 முதல் 480 வரையிலான காலப்பகுதி வரை வாழ்ந்தார். நன்மைகளை செய்ய அனைத்து மனிதருக்கும் பலம் இருப்பதாகவும் ஆட்சியாளர்களுக்கு ஆளும் அதிகாரம் கடவுளிடமிருந்து கிடைத்ததனால் அவர்கள் மக்களிடமிருந்து நல்ல விடயங்களைக் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அவர்கள் மக்களின் பெற்றோர்களாகக் கருதப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.




சீன நாகரிகத்தின் பெருமையைப் பறை சாற்றும் டெரொகொட்டா களிமண் சிலை

சீனப்பெருஞ் சுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம், உண்மை ஆகியவற்றுடன் நாட்டை நிர்வகித்தல் அவர்களின் கடமை என்பதும் தகுதியைக் கருதாமல் பொருத்தமானவர்களுக்கும் திறமை வாய்ந்தவர்களுக்கும் இடமளிக்கப்படவேண்டும் என்பதும் அவரின் தத்துவங்களாகும். அன்று சீன அதிகாரிகள் உயர் பரீட்சை ஒன்றின் பின்னரே தெரிவு செய்யப்பட்டனர்.

## பண்டைய சீன ஆட்சியாளர்கள்

சீனாவின் பண்டைய ஆட்சியாளர்கள் ஞான அரசர்கள் (Sage Kings) என்று அழைக்கப்படுகின்றனர். இவ்வாறான அரசர்கள் இருவரும் ஏகாதிபத்தியவாதிகள் ஐவரும் இருந்தனர் என்று வரலாற்றில் கூறப்படுகின்றது. இந்த ஆட்சியாளர்கள் அனைவரும் நீதியான ஆட்சியாளர்களாக இருந்தனர். அவர்கள் மூப்பு நிலையை அடைந்ததும் சிம்மாசனத்திற்கு தகுதியானவர்களை தெரிவு செய்து பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டனர். யஓ மற்றும் ஷூன் ஆகிய அரசர்கள் இருவரும் மூப்படைந்து ஓய்வு பெற்றபொழுது திறமை வாய்ந்த அமைச்சர்களுக்கு அரச பதவிகளை கையளித்தனர். தந்தையிடமிருந்து மகனுக்கு அரச பதவிகள் கிடைக்கும் வாரிசு அரசியல் அங்கு காணப்படவில்லை. இக்காலப்பகுதியில் விலங்குகளைப் பிடித்தல், மீன் பிடித்தல், விவசாயம், வியாபாரம் என்பன இருந்தன. இக்காலத்தில் இருந்த பழங்குடி அரசுகள் மத்தியில் ஒற்றுமைத் தன்மை காணப்பட்டன. சீன கலாசாரத்தின் வளர்ச்சியின் முதல் பாகம் கி.மு மூன்றாவது நூற்றாண்டாகும். இக்காலப் பகுதியில் வாழ்ந்த ஆட்சியாளர்களில் இறுதி ஆட்சியாளரான 'யு' வின் பின்னர் சீனாவின் அரச பரம்பரை ஆரம்பமாகின்றது. ஷாங்க் அரச பரம்பரை இதில் முதன்மை பெறுகின்றது. அவர்கள் கி.பி 1400தொடக்கம் வட சீனக் கரைப்பகுதிகளில் ஆட்சியை மேற்கொண்டனர். ஷாங்க் ஏகாதிபத்தியத்தின் தலைநகராக அன்யங்க் எனும் நகரம் கருதப்படுகின்றது. வியாபாரிகள் மற்றும் கைவினைப் பொருள் தயாரிப்பாளர்கள் கொண்ட சிறிய நகர் அதனைச் சூழ அமையப்பெற்றது. திறமை வாய்ந்த உலோக உற்பத்தியாளர்களும் இந்த நகர்களில் வாழ்ந்தனர். இவர்களில் பலருக்கு எழுதும் ஆற்றல் இருந்ததாக உறுதியாகியுள்ளது.

## நகரின் பாதுகாப்புக்கு முதலிடம்

அன்யங்க் நகரில் கட்டடங்கள் கட்டப்படுவதற்கு முன்பு ஆண்களையும் பெண்களையும் பலி கொடுத்து அவர்களின் சடலங்கள் மீது கட்டடங்கள் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. புதைபொருள் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளும்போது ஆய்வாளர்கள் 852 எலும்புக் கூடுகளை கண்டுபிடித்துள்ளனர். அந்நகரில் வசித்தவர்கள் எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்புக் கருதி கடவுளுக்காக இவ்வாறான பலி பூஜைகளை நடத்தியுள்ளனர். ஓர் இடத்தில் சிப்பாய்கள் தொகுதியும் குதிரைகள் பூட்டப்பட்ட குதிரை வண்டிகள் ஐந்தும் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## சீனப் பெருஞ்சுவர்

கி.மு 400 இல் உயர் வகுப்பினரைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத நிலை 'ச்செள'ஆட்சியாளர் களுக்கு ஏற்பட்டது. இதனால், குழப்பங்கள், கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இவை ஷீ ஹுவொங் டீ அரியணை ஏறிய பின்னர் முடிவுறுத்தப்பட்டன.அதன் பின் சீனா என்ற பெயருக்கு காரணமான ச்சிங் ஏகாதிபத்தியம் இந்த ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டது. அன்று இருந்த இளவரசர்களின் மனதை வென்ற அவர் வடக்கு எல்லையைப் பாதுகாக்க இருந்த சுவர்களை ஒன்றிணைத்து பாரிய சுவரைக் கட்டியெழுப்பினார். இதுவே சீனப்பெருஞ் சுவராகும்.


கொன்பியூசியஸ்

# னாவில் தோன்றிய நாகரிகம்


அடிமைகள், சிறைக்கைதிகளைக் கொண்டு பெரும் சுவர் அமைக்கப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்ட வரலாறு



கோட்டை புகையிரத நிலையத்தின் அண்மைய தோற்றம்

இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின்கீழ் இருந்தபோது இலங்கையில் தண்டவாளங்கள் அமைக்கப்படலாயின. அதன்படி, இங்கிலாந்து ரயில் நிறுவனத்தால் 1835 இல் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டு, 1845 இல் அதற்கான செலவீடு பற்றி மதிப்பிடப்பட்டபோது சுமார் 80,000 பொற்காசுகள் தேவைப்படும் என்று தெரிய வந்தது. எனினும், இதற்காக இங்கிலாந்திடமிருந்து கடனுதவி பெறுவதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து, இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

## சட்ட நிர்ணய சபையின் அங்கீகாரம்

எனினும், அன்றைய அரச செயலாளர் சளைக்காமல் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள பேச்சுவார்த்தை நடத்தினார். ரயில் சேவை இருந்தால்தான் கோப்பி வர்த்தகத்தில் பிரேஸில் நாட்டை எம்மால் வெல்லமுடியும் என்று கோப்பி வர்த்தகர்களும் தோட்டத்துரைமார்களும் கூறியதே அதற்கான காரணமாகும். அதன்படி, 1855 இல் ஆளுநர் ஹென்றி வோர்ட்டின் 80,000 பொற்காசுகளுக்காக, 6 சதவீத வட்டியை இலங்கை ஏற்க வேண்டும் என்னும் பிரேரணையை சட்டநிர்ணய சபை ஏகோபித்து அனுமதி வழங்கியது. எனினும், நிர்வாகம் மற்றும் கொள்கை பற்றிய இங்கிலாந்தின் கருத்துப்படி, இலங்கையில் தண்டவாளம் அமைப்பதை இங்கிலாந்திலுள்ள அரச செயலர் ஆட்சேபித்தார். எனவே, அரச செயலரின் அனுமதியின்றி இத்திட்டத்தை ஆரம்பிக்க தனியார் நிறுவனங்கள் விரும்பவில்லை.

## எதிர்ப்புகளை அடுத்து மீண்டும் அனுமதி

அதிக லாபம் பெறும் நோக்கத்தினாலேயே இந்த அங்கீகாரம் புறக்கணிக்கப்படுகின்றது எனக்கருதிய சட்டநிர்ணய சபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் சிலர், 1856 இல் காட்டிய எதிர்ப்பினை அடுத்து, இலங்கையில் தண்டவாளத்தை அமைப்பதற்கான தற்காலிக ஒப்பந்தத்துக்கு சட்ட நிர்ணய சபை அனுமதியளித்தது. 1857 இல் மீண்டும் அதற்கான செலவீடு மதிப்பிடப்பட்டபோது, 856,556 பொற்காசுகள் தேவை என்று உணரப்பட்டது. அதனைத்தொடர்ந்து, கொழும்பிலிருந்து கண்டி வரை தண்டவாளம் அமைக்கும் வேலை 1858 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், மூன்று வருடங்களுக்குப் பின்னர், அதாவது 1861 இல் அந்த நிர்மாண வேலை இடைநிறுத்தப்பட்டது.

காரணம், ஆரம்பத்தில் 856,556 பொற்காசுகள் செலவாகும் என மதிப்பீடு செய்த நிறுவனம், பின்னர் நிர்மாணப் பணிகளுக்காகவென்று 2,214,000 பொற்காசுகளைக் கோரியிருந்தது.

## ஆளுநரின் தலையீடு

சமதரையில் தண்டவாளம் அமைப்பதை விட மலைப்பாங்கான பகுதியில் அமைப்பது கடினமாகும். அதனால்தான் குறித்த நிறுவனம் ஆரம்பத்தில் எடுத்த செலவின மதிப்பீடு தவறாயிற்று. இந்த விடயத்தில் அரச செயலாளரோடு ஆளுநருக்கும் ஆளுநரோடு நிறுவனத்துக்கும் இடையில் சச்சரவு ஏற்பட்டது. இந்த மூன்று தரப்பினரையும் சட்ட நிர்ணய சபை குறை கூறியது. இதற்கிடையிலும் ஆளுநர் தண்டவாளத்துக்கான நிர்மாண வேலைகளைத் தொடர முறபட்டபோது, சட்ட நிர்ணய சபை அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு 1860 இல் வலியுறுத்தியது.





இலங்கையின் புகையிரத வலையமைப்பு

இதனைஅடுத்து தண்டவாளம் அமைக்கும் வேலையை ஆளுநர் நேரடியாகவே பொறுப்பேற்றார். இதனால்தான் இங்கிலாந்தையும் இந்தியாவையும்போலன்றி, இலங்கை ரயில் சேவை அரச திணைக்களமாக மாறும் சிறப்பைப் பெற்றது. அதன்படி, ஆளுநரின் வழிநடத்தலின்கீழ் தண்டவாளம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின. 1865 இல் கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸ வரைக்கும் 1867இல் கண்டி வரைக்கும் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டன. இதற்காக ஏற்கனவே குறித்த நிறுவனம் மதிப்பிட்டிருந்த தொகையை விட பாதித்தொகையே அதாவது, சுமார் 1,285,000 பொற்காசுகளே செலவாகின. பொதுமக்களுக்கான கட்டாய ஊழிய முறையை அமுல்படுத்திய ஆளுநர் இதைச் சாதித்தார். இதனைத்தொடர்ந்து விவசாயப் பொருட்கள், தோட்ட உற்பத்திப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களை கொண்டு செல்லவும் தபால் சேவைக்கும் ரயில் சேவை பிரசித்தமாகியது.



கொழும்பு-கண்டி சுரங்கப்பாதை நிர்மாணம்

## பல்வேறு நகரங்களுக்கிடையிலும் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டன

1873 இல் கண்டியிலிருந்து கம்பளைக்கும் 1874 இல் கம்பளையிலிருந்து நாவலப்பிட்டிக்கும் 1884 இல் நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டனுக்கும் 1885 இல் ஹட்டனிலிருந்து நானுஓயாவுக்கும் தண்டவாளங்கள் போடப்பட்டன. 1872 இல் இருந்து 1877 வரை ஆளுநராக இருந்த வில்லியம் க்றகரியாலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவரது திட்டத்திற்கமையவே அவருக்குப் பிறகு வந்த ஆளுநர் மாத்தளைக்கென்று தனியான ஒரு தண்டவாளத்தை 1878 இல் ஆரம்பித்து 1880 இல் முடித்து வைத்தார்.




மத்திய கொழும்பின் ஆரம்பகால புகையிரத நிலையம்

1877 இல் கரையோரமாகத் தண்டவாளங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது: முதலில் பாணந்துறை வரை அமைக்கப்பட்டது. பின்னர் 1879 இல் பாணந்துறையிலிருந்து களுத்துறை வரையும் 1890 இல் களுத்துறையிலிருந்து பெந்தோட்டை வரையும் 1891 இல் அளுத்கம வரையும் 1894 இல் காலி வரையும் 1895 இல் மாத்தறை வரையும் தண்டவாளம் விஸ்தரிக்கப்பட்டது.



கொள்ளுப்பிட்டி-கொழும்பு வரையான புகையிரத சேவை (1910)

பின்னர் இடைப்பாதையாக 1893 இல் ஹப்புத்தளைக்கும் 1899 இல் ஹப்புத்தளையிலிருந்து பண்டாரவளைக்கும் 1905 இல் பண்டாரவளையிலிருந்து பதுளைக்கும் தண்டவாளம் போடப்பட்டது. அத்தோடு, வடமாகாணத்துக்கும் தண்டவாளத்தை அமைக்குமுகமாக 1894 இல் பொல்கஹவெலயிலிருந்து குருநாகலுக்கும் தண்டவாளம் போடப்பட்டது. 1900 இல் பொல்கஹவெலயிலிருந்து அநுராதபுரம் வரை அது விஸ்தரிக்கப்பட்டது: 1905 இல் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை அப்பாதை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. 1913 இல் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும் தண்டவாளம் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்கும் மஹவையிலிருந்து கல்லோயா வழியாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கும் தண்டவாளம் அமைக்கப்பட்டது. 1907 இல் ஆரம்பிக்கப்பட்டு, 1908 இல் சிலாபம் வரை போடப்பட்ட தண்டவாளம், பின்னர் சிலாபம் வழியாக புத்தளம் வரை அமைக்கப்பட்டது.



கொழும்பு-பதுளை ஆரம்பகால புகையிரதப் பாதை

## கைவிடப்பட்ட தண்டவாளங்கள்

1900 இல் ஆரம்பிக்கப்பட்ட களனிவெளி தண்டவாளம் 1902 இல் அவிசாவளை வரைக்கும் 1903 இல் அவிசாவளையிலிருந்து எட்டியாந்தோட்டை வரைக்கும் 1912 இல் எட்டியாந்தோட்டையிலிருந்து இரத்தினபுரி வரைக்கும் விஸ்தரிக்கப்பட்டது. பின்னர் பெல்மதுள்ளை வழியாக ஓபநாயக்க வரையும் நீடிக்கப்பட்டது. அவ்வாறே, நானுஓயாவிலிருந்து நுவரெலியா வழியாக ராகலைக்கு தண்டவாளம் போடப்பட்டு, உடபுஸல்லாவை வரை நீடிக்கப்பட்டது. 2 அடி 6 அங்குலம் வரையிலான இந்த சிறிய தண்டவாளமே களனிவெளிப்பாதையாகும். அந்த சிறிய பாதை தற்போது கைவிடப்பட்டு அவிசாவளை வரை நான்கு அடி அகலத்திலான தண்டவாளம் போடப்பட்டுள்ளது. அதுபோல் நானுஓயாவிலிருந்து உடபுஸல்லாவை வரையிலான தண்டவாளமும் நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறு படிப்படியாக தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு, இலங்கையில் ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டது.

ஏ.ஜே.எம்.நிழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலும் 1300 க்கும் அதிகமான பரிசுகள்

Homerun PAS COLOUR ME COMPETITION

தங்களுக்கு விருப்பமான பெட்டியாக எப்போதும் ஹோம்ரன் பெஸ்டலையே தெரிவுசெய்த உங்களுக்கு, இதோ இப்போது பரிசுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு. அதுவே ஹோம்ரன் Colour Me போட்டி. நீங்கள் செய்ய வேண்டியது, ஹோம்ரன் பெஸ் பக்கெட்டினுள் உள்ள **ஹோம்ரன் சாம்பை** வர்ணம் தீட்டி அனுப்புவது மாத்திரமே. நீங்கள் தீட்டிய ஹோம்ரன் சாம்பின் வர்ணம், எமது சாம்பின் இலக்கமிடப்பட்டுள்ள பகுதியின் வர்ணத்தை ஒத்திருந்தால் ஹோம்ரன் பெஸ் மூலமாக கை நிறையப் பரிசுகள்.

## முதல் மாத சீட்டிழுப்பு

மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்சம் இரண்டையாவது எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, முதல் மாதச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் நொவெம்பர் 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் கூப்பன்கள் இந்தப் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும். அதில் தெரிவு செய்யப்படும் **வெற்றியாளர்களில் 500** பேருக்கு பெறுமதியான பரிசுகள் கிடைக்கும்.

## இரண்டாம் மாத சீட்டிழுப்பு

மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்சம் மூன்றையாவது எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இரண்டாம் மாத சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கும். **நொவெம்பர் 15ஆந் திகதி முதல் டிசெம்பர் 15ஆந் திகதி வரை** அனுப்பி வைக்கப்படும் கூப்பன்கள் இந்தச் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். அதில் **தெரிவுசெய்யப்படும் 04 வெற்றியாளர்களுக்கு பைசிக்கிள்களும்,** மேலும் **இருவருக்கு வரைதல் உபகரணங்களுடன் பெறுமதியான 400 ஆறுதல்** பரிசுகளும் கிடைக்கும்.

## மாபெரும் இறுதிப் போட்டி


சகல பிரிவுகளிலும் எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இறுதிச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் ஜனவரி 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் சரியான சகல கூப்பன்களும் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.

மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்படும் **முதலாவது வெற்றியாளர் குடும்பத்துடன் (தாய் மற்றும் தந்தை) மலேசியாவில் வோட்டர் வேர்ள்ட் சுற்றுலா** மேற்கொள்வார். மேலும் 10 வெற்றியாளர்களுக்கு **பைசிக்கிள்களும்** அத்துடன் **நான்கு பேருக்கு வரைதல் உபகரணங்களும்** இன்னும் **05 பேருக்கு MP3 பிளேயர்** மற்றும் **பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும்** வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - தொலைபேசி இலக்கங்கள் 011 3 198080, 011 2 925658 அல்லது 0772 398671.**

ஹோம்ரன் பெஸ் Colour Me வர்ணந்தீட்டும் போட்டி
வரையறுக்கப்பட்ட கலர் புரடக்ட்ஸ், இல. 437/4 த.பெ.இல. 10, றாகம வீதி, கடவத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்டபூர் டர்பார் சதுக்கம்

**அரசு:** குடியரசு.

**ஒன்றுபடுத்தியமை:** ராச்சியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது-1768 டிசம்பர் 21; ஜனநாயக அரச பிரகடனம்-2007 ஜனவரி 15 ஆம் திகதி; குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது-2008 மே மாதம் 28ஆம் திகதி.

**தேசிய பெயர்:** Sanghiya Loktantrik Ganatanta Nepal- நேபாள சமஷ்டி ஜனநாயகக் குடியரசு.

**ஜனாதிபதி** (2008): ராம் பரன் யாதவ்.

**பிரதமர்** (2009): மாதவ் குமார் நேபாள்.

## புவியியல்

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 75 சதவீதம் மலையும் மலைத்தொடர்களுமாகும். உலகின் மிக உயர்ந்த மலைச்சிகரமான ‘எவரெஸ்ட்’ சிகரமும் இந்நாட்டிலேயே காணப்படுகின்றது. இங்கு பல ஆறுகள் பாய்ந்தாலும் இவற்றில் கைல், கர்னாலி, நாராயணி, கோஸி என்பன பிரதானமானவை.

## தேசிய கீதம்

Sayau thuga phulka hami, eutai mala nepali
Sarwabhaum bhai phailieka, Mechi-Mahakali
Sayau thuga phulka hami, eutai mala nepali
Sarwabhaum bhai phailieka, Mechi-Mahakali ......என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்தே நேபாளத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. அங்கு பல்வேறு பிரிவினரின் ஆட்சிகளும் நிலவின. எனினும், 1768 இல் மன்னன் ப்ரித்வி நாராயாண் ஷா அவர்களால் நாடு ஐக்கியப்படுத்தப்பட்டது. 1846 முதல் 1951 வரை பிரதமர் பதவியை ராணா குடும்பத்தினரே வகித்துவந்தனர். 1951 இல் மன்னர் நேரிடையாக ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றார். 1990 முதல் அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட மன்னராட்சி நிலவியது. 2001 ஜூன் 1 ஆம் திகதி மன்னர் பீரேந்திராவும் அவரது குடும்ப உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னர் மன்னர் பீரேந்திராவின் தம்பியான ஞானேந்திரா முடிசூடினார்.





பசுபதிநாத் கோயில்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்: பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்** (2006): 595,800; **செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்கள்:** 1.042 மில்லியன். **வானொலி நிலையங்கள்:** AM 6,FM 5, SW 1. **தொலைக்காட்சி நிலையம்:** 1 (தவிர, 9 மறுஒளிபரப்புக்கள்). **இணையத்தள வழங்குனர்** (2006): 18733. **இணையத்தள பாவனையாளர்கள்:** 249400.

## போக்குவரத்து

**புகையிரதப்பாதை:** 59 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** 17380 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** இல்லை. **விமான நிலையங்கள்** (2007): 47.

# நேபாளம்




காத்மண்டு நகர்

தேசிய இலச்சினை

**அமைவிடம்: வடக்கு**-திபெத்; **கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு**- இந்தியா என்பன எல்லைகளாக உள்ளன.

**மொத்த நிலப்பரப்பு:** 54,363 ச.மைல் (140,800 ச.கி.மீ);

**நிலப்பிரிவுகள்:** 14 வலயங்கள்.

**தலைநகரம்:** காத்மண்ட்; **ஏனைய பெரிய நகரங்கள்:** பீரட் நகர்,பக்டபூர்.

**உயர்ந்த சிகரம்:** எவரெஸ்ட் (சுமார் 8,850 மீற்றர்);

**மிகத் தாழ்ந்த மையம்:** கஞ்சன் காலன் (70 மீற்றர்).

**சனத்தொகை** (2009): 28,563,377; **தேசிய இனம்:** நேபாளி.

**நாணயம்:** நேபாள ரூபாய். **இணையத்தளக் குறியீடு:** .np

**தொலைபேசிக் குறியீட்டு எண்:** 977

**மொழிகள்:** நேபாளி 48% (உத்தியோகபூர்வ மொழி), மைதாளி 12%, போஜ்புரி 7%, தாரு 6%, டமாங் 5%, அரச மற்றும் வர்த்தகத்துறையினர் ஆங்கிலம் பேசுகின்றனர்.

**இனங்கள்** (2001): பிராமண்-ஹில் 12.5%, செட்ரி 15.5%, மாகர் 7%, தாரு 6.6%, டமாங் 5.5%, நிவார் 5.4%, முஸ்லிம் 4.2%, காமி 3.9%, யாதவ் 3.9%, ஏனையோர் 32.7%, இதில் இனத்துவ அடையாளமற்றோர் 2.8%.

**சமயங்கள்** (2001): இந்து 81%,பௌத்தம் 11%,இஸ்லாம் 4%,கிரான்ட்4%.

**எழுத்தறிவு வீதம்** (2003): 45%.

**தேசிய சின்னங்கள்: பறவை**-Himalayan Monal, **மிருகம்**-மாடு, **மரம் மற்றும் மலர்**-Rhododendron, **விளையாட்டு**-கிரிக்கெட் (பிரபலமான விளையாட்டாக இருக்கின்றபோதும் தேசிய விளையாட்டாகப் பிரகடனப்படுத்தப் படவில்லை).



நாராயணி ஆறு






ஜனாதிபதி



2006 ஏப்ரலில் மன்னரின் நேரடி ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சிக் கூட்டணிகள் நடத்திய வேலை நிறுத்தப்போராட்டம், மன்னர் இணங்கி வந்ததையடுத்து நிறுத்தப்பட்டது. அதன்பின்னர் ஜி.பி கொய்ராலா பிரதமராக நியமிக்கப் பட்டார். அரசரின் அரசியல் அதிகாரத்தை வெட்டிக் குறைக்கும் மசோதா நாடாளுமன்றத்தின் ஒருமித்த ஆதரவைப் பெற்றது. 2006 இல் மாவோ தீவிரவாதிகளுக்கும் பல கட்சி முன்னணிக்குமிடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால், 2007 ஜனவரியில் மாவோவாதிகள் தற்காலிக அரசில் இடம்பெற்றனர்.

## கலாசாரம்

பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த மிகவும் உயரிய அம்சங்கள் பலவற்றைக்கொண்ட கலாசாரம் நிலவுகின்றது. பல்வேறு இனக்குழுக் களைக்கொண்ட நாடாகத் திகழ்வதால், பல்வேறு கலாசார விழுமியங்களை இங்கு காணலாம். இனரீதியாகவும் சமூகக்குழுக்கள் ரீதியாகவும் கலை அம்சங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இந்த வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

## காலநிலை

தெற்கில் உள்ள டாரை பிரதேசமானது வெப்பமான காலநிலையைக்கொண்டதாகும். மத்திய மற்றும் வடக்கில் உள்ள மலைப்பிரதேசங்களில் துருவப் பிரதேசத்திற்குரிய கடுங்குளிர் நிலவுகின்றது. பொதுவாக, மார்ச் முதல் மே வரையிலான காலப்பகுதி வெப்பமும் வறட்சியும் நிறைந்தது. மாரிகாலம் மிகவும் குளிராக இருக்கும்.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 16%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** அரிசி, தானியங்கள், கரும்பு, பால், எருமை, இறைச்சி. **தொழிலாளர்:** 11.11 மில்லியன் (இதில் விவசாயத்துறை 76%, கைத்தொழில்துறை 6%, சேவைகள் 18%). **வேலையற்றோர்** (2004): 42%. **கைத்தொழில்கள்:** உல்லாசப் பயணத்துறை, விரிப்புகள், புடவைகள், அரிசி, சீனி, தாவர எண்ணெய், சிகரெட்டுகள், சீமெந்து. **இயற்கை வளங்கள்:** நீர், விலை உயர் மரங்கள், செம்பு, காரீயம், இரும்புருக்கு. **ஏற்றுமதிகள்:** விரிப்புகள், உடை வகைகள், பாதணிப் பொருட்கள், தானிய வகைகள். **இறக்குமதிகள்:** தங்கம், இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், பெற்றோலியப் பொருட்கள், உர வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, சீனா, இந்தோனேஷியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

*** எவரெஸ்ட் சிகரத்துக்கு ஏறும் வழி * அன்னபூரணா தொடர்** - (இதனை கடவுளின் தொடர் என்றும் அழைப்பர்). *** பசுபதிநாத் கோயில் * ரோயல் சிட்வான் தேசிய பூங்கா * சங்கு நாராயணன் கோயில்** (மிகப் பழமை வாய்ந்த விஷ்ணு ஆலயம்) *** பக்டபூர் டர்பார் சதுக்கம்.**



ரோயல் சிட்வான் தேசியபூங்கா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாளின் ஒரு பகுதி

### புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் I - 2009
(சென்ற இதழ் தொடர்ச்சி....)

24. தற்போது கண்ணனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காக இருக்கும்?
   (1) 6 (2) 10 (3) 24

25. 200 இன் அரைவாசியின் 1/4 உடன், 5 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?
   (1) 25 (2) 30 (3) 35

26. 41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்ணை எழுதும்போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
   (1) 4 (2) 5 (3) 6

27. உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



   (1) வெட்டுதல், வரைதல், எழுதுதல்
   (2) எழுதுதல், வெட்டுதல், அணிதல்
   (3) வெட்டுதல், எழுதுதல், அணிதல்

28. உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?



   (1) செவ்வகம்
   (2) வட்டம்
   (3) முக்கோணி


29. உருவில் காணப்படும் திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?



   (1) (2) (3)

30. இரு மனிதர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலிருந்து எதிர்த்திசைகளில் செல்ல ஆரம்பித்து, முதலில் 5 மீற்றர் வீதம் சென்று, தமது வலக்கைப் பக்கத்திற்குத் திரும்பி, மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். பின்னர் இருவரும் தமது வலக்கைப் பக்கத்திற்குத் திரும்பி, மேலும் 5 மீற்றர் வீதம் சென்றனர். இப்போது அவர்கள் இருவரும் இருப்பது;
   (1) ஒருவரிலிருந்து மற்றவர் 5 மீற்றர் தூரத்தில்
   (2) ஒருவரிலிருந்து மற்றவர் 10 மீற்றர் தூரத்தில்
   (3) ஆரம்பித்த இடத்தில்

✱ A, B என்னும் இரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 10 கிலோமீற்றர் ஆகும். ஒரு குறித்த நாளில் முற்பகல் 6.00 இற்கு முகுந்தன் -A யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 3 கிலோமீற்றர் என்னும் வீதத்தில் B யை நோக்கிச் செல்கின்றான். மோகன் அதேநேரத்தில் B யிலிருந்து ஆரம்பித்து மணித்தியாலத்திற்கு 2 கிலோமீற்றர் என்னும் வீதத்தில் A யை நோக்கிச் செல்கின்றான்.





31. முகுந்தனும் மோகனும் சந்திப்பது A யிலிருந்து;
   (1) 3 கிலோமீற்றர் தூரத்தில்
   (2) 5 கிலோமீற்றர் தூரத்தில்
   (3) 6 கிலோமீற்றர் தூரத்தில்

32. முகுந்தனும் மோகனும் சந்திக்கும்போது நேரம் யாது?
   (1) முற்பகல் 7.00
   (2) முற்பகல் 8.00
   (3) முற்பகல் 9.00

**அடுத்த வாரம் வினாத்தாள்-II இடம்பெறும்**

✱ சிறுபிள்ளைகள் சைக்கிள் ஓடுவதற்காக ஒரு விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள சில பாதைகளைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரிமீற்றராகும்.1 சென்ரிமீற்றரினால் 10 மீற்றர் தூரம் காட்டப்படுகின்றது.




33. ஒரு பிள்ளை, இடம் A யிலிருந்து ஆரம்பித்து K, L, B ஆகியவற்றைக் கடந்து C யிற்குச் சென்று வலப்பக்கமாகத் திரும்பி முறையே E,F,M,L ஆகியவற்றை கடந்து D யிற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?
   (1) 210 (2) 240 (3) 280

34. ஒரு பிள்ளை இடம் I இல் இருந்து ஆரம்பித்து K யினூடாக H இற்குச் சென்று இடப்பக்கமாகத் திரும்பி M இனூடாக F, E, C, B, J, D ஆகியவற்றைக் கடந்து மறுபடியும் I யிற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?
   (1) 210 (2) 240 (3) 280

✱ பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, D, E, F, H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கிலன்றி) இடப்பட்டு அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

HEAD = 1235
FEED = 1134

35. எழுத்து E யிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
   (1) 1 (2) 3 (3) 5

36. எழுத்து D யிற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
   (1) 1 (2) 3 (3) 5

✱ நிமலன், கமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 60kg எனவும் கமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 64kg எனவும் நிமலன், கமலன், அமலன் ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 98kg எனவும் தரப்பட்டிருப்பின்;

37. அமலனின் நிறை யாது?
   (1) 30kg (2) 34kg (3) 38kg

38. நிமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?
   (1) 68kg (2) 72kg (3) 76kg

✱ பின்வரும் விவரத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.

எனது பெயர் சேகர். நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்துத் தரிப்பிடத்தில் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் சுசீலா வகுப்பு முடிவடைந்து வரும் வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை. அந்நேரத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அலுவலக வேலை முடிவடைந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்து இருந்தனர். தங்கை சுசீலா அப்பேருந்திலிருந்து இறங்கி வந்தார்.

39. பின்வரும் கூற்றுகளிடையே சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) சேகர் தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.
   (2) சுசீலா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.
   (3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.

40. பின்வரும் கூற்றுகளிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) சேகரின் தந்தை சுசீலாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.
   (2) சுசீலாவின் தாயார் சேகரின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.
   (3) சுசீலாவின் தாயார் சேகரின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

### புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் I - 2009 விடைகள்
(சென்ற இதழ் தொடர்ச்சி....)


| | | | | | |
|---|---|---|---|---|---|
| (24) 1 | (25) 2 | (26) 3 | (27) 3 | (28) 1 | (29) 1 |
| (30) 2 | (31) 3 | (32) 2 | (33) 3 | (34) 3 | (35) 1 |
| (36) 2 | (37) 3 | (38) 2 | (39) 3 | (40) 3 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய இலங்கையின்


சொரபொர வாவியின் திருகாணி

**இலங்கை, விவசாயத்தை ஜீவனோபாயமாகக்கொண்ட ஒரு நாடாகும். அதனாலேயே முற்காலத்திலிருந்து இங்கு சிறப்பான நீர்ப்பாசன கட்டமைப்பைக் காணக்கூடியதாக இருக்கின்றது. "வானில் இருந்து பூமியை வந்தடையும் ஒரு துளி நீரேனும் பயன்பாட்டுக்குட்படாமல் கடலுடன் சங்கமிக்கக்கூடாது" என்ற மகா பராக்கிரமபாகு மன்னனின் கூற்று முற்காலத்தில் இலங்கையில் சிறந்த நீர்ப்பாசன முறை அமுலில் இருந்ததை மேலும் உறுதிப்படுத்துகின்றது**



## வரலாறு

இலங்கையில் ஆரியரின் வருகையுடன் புதிய நாகரிகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. இக்காலப் பகுதியில்தான் முறையான நீர்ப்பாசன முறையும் அறிமுகமாகியதாக வரலாறு கூறுகின்றது. பண்டைய வரலாற்று மூலாதாரங்களாக கொள்ளப்படுகின்ற வம்சக் கதைகள், கல்வெட்டுக்கள் மற்றும் தொல்பொருள் கண்டுபிடிப்புக்கள் என்பன இதற்கு சான்று பகர்கின்றன.

ஆரம்பக் குடியேற்றவாசிகளின் பிரதான கவனம் உணவு உற்பத்தியிலேயே தங்கியிருந்தது. அன்று இலங்கையில் முத்து, ரத்தினக்கல் விற்பனைகள் பிரதான வியாபாரமாக இருந்தபோதும், அதன் மூலம் அவர்களால் உணவுத் தேவையை பூர்த்திசெய்து கொள்ளமுடியவில்லை. காரணம், அன்று தானிய உற்பத்தி பிரதான தொழிலாக இல்லாதிருந்தமையாகும். எனவே, உணவுத்தேவையை நிறைவேற்றும் பொருட்டு விவசாயம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது.ஆரியர்கள் வாழ்ந்த இந்து நதிப்பள்ளத் தாக்கை அண்டிய பகுதிகளில் பயிர்ச்செய்கையாக நெற்பயிர்ச்செய்கையே விளங்கியது. அதற்கமைய, இலங்கையிலும் அவர்கள் நெற்பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளலாயினர். அதற்காக சிறந்த நீர்ப்பாசன முறையும் ஏற்படுத்தப்பட்டது.

## நீர்ப்பாசனத்தின் ஆரம்பம்

ரஜரட்ட நீர்ப்பாசனக் கட்டமைப்பின் ஆரம்ப காலத்தில் சிறிய குளங்களே அமைக்கப்பட்டன.எனினும், இத்தகைய சிறிய குளங்கள் தொடர்பாக பண்டைய பதிவுகளில் பெருமளவில் குறிப்பிடப்படவில்லை. எனினும், ரஜரட்ட ராசதானிக்குட்பட்ட ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் சிறிய குளங்கள் அமைக்கப்பட்டிருந்தற்கான ஆதாரங்கள் உள்ளன.

அத்துடன், அன்றைய நீர்ப்பாசன தொழில்நுட்பம் தொடர்பாக குறிப்பிடப்படும்போது முதலில் பண்டுகாபய மன்னர் காலத்தைப் பற்றியே பதிவாகியுள்ளது. பண்டுகாபய மன்னருடன் அநுராத எனும் அமைச்சரைப் பற்றியும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய குளங்களுடன் பாரிய வாவிகளும் இவர்களால் நிர்மாணிக்கப்பட்டதாக மகாவம்சத்தில் மேலும் பதிவாகியுள்ளது. அநுராதபுர காலத்தில் வசப மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட அபய வாவி, முதலாம் நூற்றாண்டளவில் நிர்மாணிக்கப்பட்ட நுவர வாவி, தேவாநம்பியதிஸ்ஸ மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட திஸா வாவி ஆகியனவும் இவ்வரிசையில் இடம்பெறுகின்றன.

சாதாரண அளவிலான குளமொன்று நிர்மாணிக்கப்பட்ட பண்டைய காலமாக கூட்டகன்னதிஸ்ஸ மன்னரின் ஆட்சிக்காலம் குறிப்பிடப்படுகின்றது. மகாவம்சத்தில் இந்தக் குளம் வன்னக குளம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவலி கங்கையின் நீரை விவசாயத் தேவைக்காகப் பயன்படுத்திய பண்டைய காலமாகவே கூட்டகன்னதிஸ்ஸ மன்னரின் ஆட்சிக்காலம் கருதப்படுகின்றது.

## நீர்ப்பாசன தொழில்நுட்பம்

மிகவும் முன்னேற்றகரமானதும் சிறந்ததுமான தொழில்நுட்பத்தில் அமைந்த நீர்ப்பாசன முறை பண்டைய காலத்திலிருந்தே இலங்கையில் இருந்து வந்திருக்கின்றது. பாரத தேசத்தில் இருந்ததைவிட பல நிலைகளிலும் உயர்ந்த-தேர்ச்சிமிக்க நுட்ப முறைகள் இலங்கை நீர்ப்பாசனத் திட்டங்களில் பின்பற்றப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது. நிலத்தை அளத்தல், நிலத்தை சமப்படுத்தல், நில அமைப்புகளைப் பரிசோதித்தல் போன்ற நடவடிக்கைகள் இதன்போது பிரதானமாக கவனத்தில் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அணைகள், கால்வாய்கள், நீரேந்து பிரதேசங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதிலும் இந்த உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பெரிய நீர்நிலையில் இருந்து சிறிய குளத்திற்கு நீரைப் பாய்ச்சுதல், தேக்கி வைத்தல், வெடிப்புகள் ஏற்படாமல் உறுதியாக-நீண்டகாலம் இருக்கும் வகையில் சுவர்கள், அணைகளை நிர்மாணிப்பதில் முறையான நீர்ப்பாசன பொறிமுறைகள் அன்றைய காலத்தில் கையாளப்பட்டிருக்கின்றன.

## பிரசித்தி பெற்ற கால்வாய்களை அமைத்தவர்கள்

### மகாசேன மன்னன்

'அம்பன்' கங்கைக்குக் குறுக்கே அணையொன்றை நிர்மாணித்து, 'தலவத்து' கால்வாய் மூலம் 'மின்னேரியா' குளத்திற்கு நீர் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டார்.




கிரித்தலைக் குளம்


சொரபொர வாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசன முறைகள்



### வசப மன்னன்

'எலஹெர' கால்வாயை நிர்மாணித்தார்.

### தாதுசேன மன்னன்

'மகாவலி' கங்கைக்குக் குறுக்கே அணையைக்கட்டி, எல்லா வயல்களுக்கும் நீர் வழங்கக்கூடிய வசதியைச் செய்தார். கலா வாவியில் இருந்து திஸா வாவிக்கு நீரைக் கொண்டுசெல்லும் நோக்கில் 'யோத' கால்வாயை நிர்மாணித்தார்.

### முதலாம் உதய மன்னன்

நீலகல்ல விகாரைக்கு அருகில் விசாலமான கால்வாயொன்றை நிர்மாணித்தார்.

### முதலாம் அக்கபோதி மன்னன்

'மினிப்பே' கால்வாயை (17 மைல்களுக்கு) விஸ்தரித்தார். பின்னர் நான்காம் சேன மன்னன் இக்கால்வாயை 47 மைல்கள் வரை விஸ்தரித்தார்.

### முதலாம் பராக்கிரமபாகு மன்னன்

பராக்கிரம சமுத்திரத்தில் இருந்து வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக சிறிய கால்வாய்களை அமைத்தார்.
அவையாவன;

* கம்பீர
* யுங்கபத்ர
* மங்கல கங்கை
* நர்மதா
* சரபு
* அனோதத்த
* நீலவாஹினி
* ஹேமாவதி
* (ச்)சம்பா யமுனா
* நேரஞ்சனா.

அத்துடன், மகாவலி கங்கையில் இருந்து விவசாய நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்காக மேலும் பல சிறிய கால்வாய்களும் நிர்மாணிக்கப்பட்டன.


### நீர்ப்பாசனத்துக்கான உரிமை

நீர்ப்பாசனத்துக்கான உரிமைகள் அரசன், விகாரை, கிராமிய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் என்ற அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன்படி, பிரதான வாவி உட்பட அனைத்து கால்வாய்களும் அரசனுக்கு உரிமையானவை. அத்துடன், அரசனின் தலையீட்டில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களுக்கான உரிமையும் அரசனுக்கே இருந்தது. அவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானமும் அரசனுக்கே வழங்கப்பட்டது.

காணி, சிறிய குளங்களுடன் இணைந்த நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்டவை விகாரைகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. பிற்காலத்தில் மக்களின் ஒத்துழைப்புடனும் தனிநபர்களாலும் நிர்மாணிக்கப்பட்ட குளங்களுக்கான உரிமை அவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

### பராமரிப்பு

நீர்நிலைகளின் பராமரிப்புக்களுக்காக பல்வேறு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். குளங்கள், கால்வாய்கள், அணைகட்டுகளுக்கு சேதம் விளைவிப்பது குற்றச்செயலாகக் கருதப்பட்டுள்ளது. குளக்கரையில் கால்நடைகளை மேய்ப்பது, மரங்களை வெட்டுவது ஆகியன தடை செய்யப்பட்டிருந்தன. மேற்படி சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்தபோதும் காலத்திற்குக் காலம் குளங்களைப் புனரமைக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டது.




### நீர்ப்பாசன நாகரிகத்தின் வீழ்ச்சி


13 ஆம் நூற்றாண்டின் மத்திய காலகட்டமளவில் உலர் வலய நாகரிகம் வீழ்ச்சியடையலாயிற்று. அதனைத் தொடர்ந்து சிங்களவர்கள் ஈரவலயப் பகுதிகளுக்கும் மலைநாட்டுக்கும் இடம்பெயர்ந்தோடு, தமிழர்கள் வடக்கு நோக்கியும் இடம் பெயரலாயினர். இதனால், குடியிருப்புக்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் காணப்பட்டதோடு, அப்பிரதேசங்களில் மக்கள் நடமாட்டமும் குறைந்தது. இதனால், குளங்களின் பராமரிப்பும் வீழ்ச்சி கண்டது.

இதனை அடுத்து, இடம்பெற்ற சோழப்படையெடுப்புடன் அநுராதபுர ராசதானி வீழ்ச்சி கண்டது.

**அமீர் ஹுசைன்**


கலா வாவி


பராக்கிரம சமுத்திரம்


காவற்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடை ஆசை



ஓர் ஊரில் பொன்னுச்சாமி என்றொரு விவசாயி இருந்தான். அவன் மனைவி மங்கம்மா ஒரு முட்டாள். இருந்தும் அவன் அவளோடு அனுசரித்து வாழ்ந்துவந்தான். ஒருநாள் பொன்னுச்சாமிக்கு வடை சாப்பிட வேண்டுமென ஆசை ஏற்பட்டது. அவன் தனது ஆசையை மனைவியிடம் தெரிவித்தான். மங்கம்மா, "வடைக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொண்டு வந்து மிக மெதுமெதுவாக அழகான வடை சுட்டுத்தருகிறேன். நீங்கள் நிலத்திற்கு செல்லுங்கள். மாலை நீங்கள் வீடு திரும்பியதும் இங்கு வடை தயாராக இருக்கும்" என்று கூறி பொன்னுச்சாமியை வழியனுப்பினாள். பொன்னுச்சாமிக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. அவன், "மாலை திரும்பி வருகிறேன்" எனக்கூறி நிலத்திற்கு சென்று வேலையை தொடங்கினான்.

மங்கம்மாவும் வடைக்குத் தேவையான பருப்பு, மா, உளுந்து, எண்ணெய் என்பன வாங்கி வந்தாள். உளுந்தைக் கழுவி ஊறவைத்து எடுக்கவே மாலையாகி விட்டது. மங்கம்மா சுறுசுறுப்பாக இயங்கினாள். வடை அழகாக மெமெதுவாக வந்தது. அதனை ருசி பார்க்க நினைத்து அவள் ஒரு வடையை சாப்பிட்டாள். மிக ருசியாக இருந்தது. இன்னொன்றையும் சாப்பிடுவோம் என எண்ணி ஒவ்வொன்றாக எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தாள். மொத்தமாக 60 வடை சுட்டாள். பொன்னுச்சாமிக்கு ஒன்றை வைத்துவிட்டு மிகுதி 59 வடைகளையும் சாப்பிடலானாள். மிகுதியாக ஒன்று மட்டும் இருந்தது. மாலையில் ஆசை ஆசையாக வீடு திரும்பிய பொன்னுச்சாமி வடையை கொண்டு வருமாறு கூறினான். அவள் ஒரே ஒரு வடையை மாத்திரம் கொண்டு வந்தாள். பொன்னுச்சாமி அதிர்ச்சியடைந்து "மொத்தமாக எத்தனை வடை சுட்டாய்?" என்று கேட்டான். அவள் அறுபது எனக் கூறினாள். "மிகுதி எங்கே?" எனக் கேட்ட போது, மங்கம்மா தான் சாப்பிட்டதாகக் கூறினாள். பொன்னுச்சாமி "அவ்வளவையும் நீ எப்படி சாப்பிட்டாய்?" என அதிர்ச்சியுடன் கேட்டான். மங்கம்மா "இதோ இப்படித்தான்" எனக் கூறி இருந்த ஒரு வடையையும் சாப்பிட்டு விட்டாள். பொன்னுச்சாமி தன் விதியை நினைத்து நொந்து கொண்டான்.

*பாத்திமா சமீரா,*
*சென்மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவ.*

## பொது அறிவு

* ஜாவாத் தீவு மக்கள், தங்கள் வீடுகளில் மாடுகள் கன்று போட்டால் நண்பர்களுக்கு சிறந்த விருந்து கொடுத்து மகிழ்கின்றனர்.
* உலகில் முதன்முதலில் கண் வங்கியை ஏற்படுத்திய நாடு இலங்கைதான். இங்கு சுமார் ஆறு லட்சம் மக்கள் தாங்கள் இறந்த பிறகு தங்கள் கண்களை எடுத்துக் கொள்ளுமாறு கூறி நாட்டின் கண் வங்கிக்கு உறுதிப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர்.
* ஒவ்வொரு ஆண்டும் 60,000 கஸ்தூரி மான்கள் கஸ்தூரி பெறுவதற்காகக் கொல்லப்படுகின்றன. இவற்றிலிருந்து மொத்தம் 2,000 கி.கிராம் கஸ்தூரி பெறப்பட்டு ஒரு கிலோ 6,000 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.
* கஸ்தூரி மான்கள் பிறந்து ஓராண்டு ஆனவுடனேயே இவற்றின் உடலில் கஸ்தூரி தோன்ற ஆரம்பித்து விடுகின்றது. இந்த மான்களின் உடலில் கஸ்தூரி அதிக அளவில் தோன்ற ஆரம்பித்தவுடன், பால் உணர்ச்சி அதிகம் ஏற்படுகின்றது.
* மனிதர்களுக்கு வெளிச்சத்தில் விட இருட்டில் காது நன்கு கேட்குமாம்.

எம்.கே.எச்.றசீனா,
கே/இக்ரா மு.ம.வித்., உலப்பனை.



## செய்தித்தாள்

செய்தித்தாள் படிப்பது
சிறந்த பழக்கம் அறிந்திடு
நாட்டு நடப்பு அனைத்தையும்
நன்கு புரிந்திடும் தெரிந்திடு!

பொது அறிவு வளர்ந்திடும்
புதுமை பலவும் புரிந்திடும்
நாள்தோறும் வந்திடும்
நல்ல செய்திகள் தந்திடும்!

புதிய செய்திகளை தினம் தினம்
பொலிவுடனே தந்திடும்
பலதும் கற்க நாமுமே
பண்டிதராய் ஆகலாம் படித்திடு!

சிறுவர் பெரியோர்
அனைவருக்கும்
சிறந்த செய்திகள் பலதையும்
சிறப்புடனே தந்திடும்
செய்தித்தாளை படித்திடு!

செ.ரவிசாந்,
வீரமனை, குப்பிளான்.



## சாரணிய ஸ்தாபகர் பேடன்பவல்



1857 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி பிறந்த பேடன்பவல் இளம் வயதிலேயே தனது தந்தையை இழந்தார். இவர் தமது இளம் வயதிலேயே ராணுவத்தில் சேர்ந்து கனடா, இந்தியா ஆகிய நாடுகளில் சேவை செய்து ஆபிரிக்காவிலேயே பல வீரச் செயல்களைப் புரிந்தார். ஆபிரிக்காவில் இவர் யுத்த காலத்தில் இளம் மாணவர்களை தூது அனுப்புவதற்கு பயிற்றுவித்தார்.

ஆபிரிக்காதான் சாரணியத்திற்கு வேண்டிய அனுபவங்களை இவருக்குக் கொடுத்தது. ஆபிரிக்காவே அவரது இதயத்தைக் கவர்ந்த நாடாகையால் இவர் தமது பிற்கால வாழ்க்கையையும் கென்யாவில் மேற்கொண்டு 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தனது 84 ஆவது வயதில் இவ்வுலகை விட்டு உயிர்நீத்தார்.

பேடன்பவல் பிரபுவினால் வெளிவந்த 'உலக சாரணர்கட்டு உதவி' என்ற நூல் முதியோருக்குதவியாக எழுதப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள பிரவுன்ஸி என்ற தீவில்தான் உலகின் முதல் சாரணர் மாநாடும் சாரணியப் பயிற்சிப் பசறையும் 24 சிறார்களுடன் பரீட்சார்த்த முறையில் பேடன்பவல் பிரபுவினால் உதித்தது.




1908 ஆம் ஆண்டு சிறார்களுக்கு 'சாரணியம்' என்ற புத்தகம் வெளியானது. ஆனால், 1910 ஆம் ஆண்டளவில்தான் சாரணர் இயக்கம் உலகெங்கும் பரவி மிகவும் சிறப்புறத் தொடங்கியது. இச்சமயத்தில்தான் இவர் தமது ராணுவ வாழ்க்கையைத் துறந்து தமது இரண்டாவது வாழ்க்கையைத் தொடங்கினார்.

1912 ஆம் ஆண்டு உலகச் சகோதரத்துவ இயக்கத்தை வளர்க்கும் நல்ல நோக்கத்துடன் உலகப் பிரயாணத்தை மேற்கொண்டார். பிறகு 1916 ஆம் ஆண்டில் குருளையர் இயக்கமும் 1918 ஆம் ஆண்டில் ரோவர்ஸ் சாரணர் இயக்கமும் 1919 ஆம் ஆண்டில் சர்வதேச சாரணர் பயிற்சி முதலியவற்றிற்கு மையமாக தோன்றும் லண்டனிலுள்ள கில்லஸ் மைதானமும் தோன்றின.

1934 ஆம் ஆண்டு சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் அவர்களின் இலங்கை விஜயம் இலங்கைக்கு பெருமையளித்துள்ளது.

**எம்.கே.பாத்திமா ஹெனா, தரம் - 8B,**
**கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.**

## மார்க்ட்வெய்னின் வருத்தம்



அமெரிக்க எழுத்தாளரான மார்க்ட்வெய்னை ஒருமுறை கலிஃபோர்னியா நகர் மக்கள் தம் ஊருக்கு வந்து சொற்பொழிவு ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்கி மார்க்ட்வெய்னும் கலிஃபோர்னியா நகர் சென்றிருந்தார்.

அன்றிரவு அவர் சொற்பொழிவு ஆற்றவேண்டும். காலை உணவு உட்கொண்டதும் சவரம் செய்து கொண்டால் நல்லது என்று தோன்றியது.இதனால், அவர் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு சலூனை நோக்கி நடந்தார். சலூனிற்குள் நுழைந்ததும் அவரை வணக்கம் கூறி வரவேற்ற நாவிதன், "ஐயா! தாங்கள் இந்த ஊருக்குப் புதியவரோ?" என்று பணிவோடு கேட்டான்.

"ஆம் அப்பா! இந்த ஊருக்கு வருவது இதுதான் முதல் தடவை" என்றார் மார்க் ட்வெய்ன்.

"அப்படியா? ரொம்ப நல்ல நேரத்தில்தான் வந்திருக்கிறீர்கள். இன்றிரவு எங்களூரில் மார்க் ட்வெய்ன் என்பவர் பேசப் போகிறார் தெரியுமா உங்களுக்கு? அவசியம் போய்க் கேளுங்கள் ஐயா பேச்சை"

"அப்படித்தான் நானும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்"

"டிக்கட் வாங்கி விட்டீர்களா?"

"இல்லை இன்னும் வாங்கவில்லை. போய் வாங்கவேண்டும்"

"ஐயையோ! இனிமேல் கிடைக்காதே ஏற்கனவே எல்லாம் விற்பனையாகி முடிந்துவிட்டதே!"

"அப்படியா?"

"ஆமாம், அவர் பேச்சைக் கேட்க வேண்டுமென்றால் நீங்கள் நின்று கொண்டுதான் கேட்கவேண்டும்"

"ஒழிந்து போகட்டும். என்னைப் போலத் துரதிர்ஷ்டம் பிடித்த ஒருவனை நான் ஒருபோதும் பார்த்ததே இல்லை ஐயா,எப்பொழுது பார்த்தாலும் அந்த மனிதன் பேசும்போது நான் நின்றுதான் தொலைக்க வேண்டியிருக்கிறது" என்றார்.

தொகுப்பு: மர்ஸியா நாபிர்
பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்.இல: 3111

அலியார் சஜீர்,
தரம் - 3A,
முஸ்லிம் ம.வித்.,
சம்மாந்துறை-07.



அங்.இல: 3112

க.டிலக்ஷன்,
தரம் - 11,
த.ம.ம.வித்.,
வவுனியா.



அங்.இல: 3113

ஜோசப் தேவநேசன்,
தரம் - 9B,
புனித பத்திரிசியார் கல்.,
தலவாக்கலை.



அங்.இல: 3114

அ.எட்மினஸ்,
தரம் - 11,
புனித பத்திரிசியார் கல்.,
யாழ்ப்பாணம்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3115

எம்.ஜுமைல்,
தரம் - 6A,
அல்-முபாரக் தே.பாட.,
மல்வானை.



அங்.இல: 3116

எம்.ஸகீர்,
தரம் - 9B,
அக்/ஃபாயிஸா ம.வித்.,
பள்ளிக்குடியிருப்பு-01.



அங்.இல: 3117

ஜெ.ஜெயஜொய்சன்,
உயர் தரம் (கலைப்பிரிவு),
புதுக்குடியிருப்பு ம.கல்.,
முல்லைத்தீவு.



அங்.இல: 3118

எம்.ஸஹ்ரி,
தரம் - 8,
பொ/முஸ்லிம் ம.கல்.,
பொலன்னறுவை.

# குண்டூசி முனையில் 4 லட்சம் பக்ற்றீரியாக்கள்



மனிதன் அறியாமலேயே அவனை தொற்றி, நோய்களை ஏற்படுத்தக் கூடிய நுண்ணுயிர்கள் ஏராளம் இருக்கின்றன. இதனால் இவற்றை 'நுண்ணிய எதிரிகள்' என்றும் கூறலாம். இவ்வாறு மனிதனுக்கு நோய்களை ஏற்படுத்துவதில் பக்ற்றீரியாக்களுக்குப் பெரும் பங்குண்டு.

ஆனால், மனிதனையே பலமிழக்கச் செய்யக்கூடிய இந்த நுண்ணுயிரிகளை நம் கண்களால் காணவே முடியாது. அவற்றை நுணுக்குக்காட்டிகளுடாகத்தான் காணமுடியும். எமது உயிரணுக்களே மிகச் சிறியதாக இருக்கும் நிலையில், அந்த உயிரணுவைதாக்கக் கூடிய பக்ற்றீரியாக்களோ அதிலும் ஆயிரம் மடங்கு சிறியவையாக இருக்கின்றன. அவை எந்தளவிற்குச் சிறியதென்றால், ஒரு குண்டூசி முனையில் 4 லட்சம் பக்ற்றீரியாக்கள் அமர்ந்துகொள்ளக்கூடியளவு சிறியவையாம்!


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..........................................
..........................................
முகவரி - ..........................................
..........................................
தொ.பேசி - ..........................................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..........................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02**


## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 04.11.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 16
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | கி | 2 த | ம் | ■ | 3 நீ |
| ல | ■ | க் | ■ | 4 ந | தி |
| 5 ம் | க | கா | ■ | ■ | ம |
| ■ | ■ | 6 ளி | 7 உ | ■ | ன் |
| ■ | 8 கு | ■ | ப் | ■ | ற |
| 9 க | ரு | ம் | பு | ■ | ம் |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 14 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

*முதலாம் பரிசு*
ஏ.கபீர்த்தன்,
620, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

*இரண்டாம் பரிசு*
ஏ. இயன் அன்டனி,
25/3, சேர்ச் ரோட்,
பலாங்கொடை.

*மூன்றாம் பரிசு*
மொஹிடீன் ஏ.அஸீஸ்,
1232 2/4, ஸ்ரீராஜபக்ஷ மாவத்தை,
ஹுனுபிட்டிய,
வத்தளை.

### ஆறுதல் பரிசுகள்

மாஜிதா மஸூட்,
286, மங்கெதர,
துல்ஹிரிய.

குகதாசன் மாதங்கி,
527, செல்வநாயகபுரம்,
திருகோணமலை.

எம்.எஃப்.பாசில்,
9, விடுதி வீதி,
4ஆம் ஒழுங்கை,
புதிய காத்தான்குடி-06.

ஆர்.அக்ஷயா,
58/7, புத்தளம் வீதி,
சிலாபம்.

இப்திஸாமா இக்பால்,
31-A, கஹட்டோவிட்ட,
வெயாங்கொட.

செ.ரமணன்,
கலைவாணி வீதி,
வடலியடைப்பு.

என்.எப்.நஸ்லா,
முஸல்பிட்டிய,
பள்ளிவாசல்துறை,
புத்தளம்.

உ.புவிதா,
51, அளுத்கெதரவத்தை,
களுதாவளை,
மாத்தளை.

எம்.எம்.எம்.மிஸ்பர்,
40, மீயல்ல,
ஹக்மனை.

கு.வினோத்தரன்,
B-3 F/39, புளுமெண்டல் தொடர்மாடி,கொழும்பு-14.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஞ் | 2 | | 3 | |
| | ■ | | ■ | | ■ |
| 4 | பு | | ■ | 5 | கை |
| ■ | ■ | | ■ | ■ | ■ |
| 6 | | ன் | ■ | ■ | 7 பு |
| தை | ■ | ■ | 8 கோ | | |

பெயர் : ..........................................
வீட்டு முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இல : ..........................................
பாடசாலை : ..........................................
அருகிலுள்ள நகரம் : ..........................................
மாவட்டம் : ..........................................

### மேலிருந்து கீழ்

1. புதல்வன் என்றும் சொல்லலாம்.
2. உடன் பிறந்தவன்.
3. சிநேகிதம் என்றும் சொல்லலாம்.
6. சிறுவர்களுக்கு இது கேட்க மிகவும் பிடிக்கும்.
7. மிதித்தாலும் வளைந்து கொடுக்கும்.

### இடமிருந்து வலம்

1. சீனாவில் உள்ள நதி.
4. கிழமைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
5. நெருப்பில்லாமல் இது வராது என்பர்.
6. இது அன்பை முறிக்குமாம்.
8. புனிதத் தலம் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரப்பத்தனை, சட்டன் எஸ்டேட்டைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன்-சிவரஞ்சிதம் தம்பதியரின் செல்வப் புதல்வன் சருபன், 20.10.2009 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அம்மா, அப்பா உட்பட குடும்பத்தினர் அனைவரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: ச.பபியா)*

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



குருநாகல், பறகஹதெனியவைச் சேர்ந்த ஹிஸாம்-ரிஸானா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹிமாஸ், 15.10.2009 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.


# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### காலைக்காட்சி



ஏ.எஃப்.சஜீதா,
தரம் - 9^A, முஸ்லிம் ம.வித்.,
சம்மாந்துறை.

### பலூன்கள்



இ.பிரசாந்,
தரம் - 4^B, வவுனியா த.ம.ம.வித்.,
வவுனியா.



ச.கோடீஸ்வரன், தரம் - 5^A,
வலயம்-04
நலன்புரி நிலையப் பாட.,
செட்டிக்குளம்.



எம்.என்.எம்.சபீப்,
தரம் - 1, கேகாலை மு.ம.வித்.,
கேகாலை.


### முயல்



கு.குகானந்,
தரம் - 7^A,
யாழ்.இந்துக். கல்.,
யாழ்ப்பாணம்.



எஸ்.எச்.நுஸ்கா,
தரம் - 6^E,
அட்/ம.ம.வித்.,
அட்டாளைச்சேனை-15.



பாத்திமா அப்ஸா,
தரம் - 8^B,
ஹைலன்ட்ஸ் ம.கல்.,
ஹட்டன்.

### ஆடுகளும் இடையனும்



து.ஜெயகரன்,
தரம் - 10^J,
இராமநாதன் நலன்புரி நிலையப் பாட., செட்டிக்குளம்.

### நான்




எ.அனிற்றா, தரம் - 3^C,
கார்மேல் பாத்திமா தே.கல்.,
கல்முனை.




அ.தனுஷாலினி,
தரம் - 2,
பூண்டுலோயா த.ம.வித்.,
பூண்டுலோயா.

### விசிறி



ஆர்.றிஸ்தா, தரம் - 8^B,
பூலாச்சேனை அ.மு.வித்.,
பூலாச்சேனை.



எஃப்.அகீலா பானு,
தரம் - 7^A, அல்-ஜாயிஸ்ஸா வித்.,
ஒலுவில்.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.எம்.அக்ரம், தரம் - 10^C,
ஸாஹிரா தே.கல்.,
புத்தளம்.



ம.ரிஷாலினி, தரம் - 4,
கிளி/கண்டாவளை ம.வித்.,
கண்டாவளை.



எஸ்.சத்தியாஜினி,
தரம் - 9,
மோபிறே கல்லூரி,
கண்டி.



நிஸ்மா மஜீத், தரம் - 6,
மட்/அல்-முனீரா பா.ம.வித்.
ஏறாவூர்.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 18.11.2009

### ஜனவரி மாதத்துக்கான தலைப்புகள்

★ தரம் 1-5 - எனது வீடு அல்லது ஐஸ் பழம்
★ தரம் 6-8 - எனது ஆசிரியர் அல்லது மாட்டு வண்டி
★ தரம் 9-11 - மரங்கள் நடுவோம் அல்லது மீன் வியாபாரி

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசாவின் புனித சடலத்தைக் கேட்கும் அல்பேனியா






இந்தியாவில் குடியுரிமை பெற்று தமது பணிகளை முன்னெடுத்து வந்தார். 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி இறையடி சேர்ந்த அவரது உடல் இந்தியாவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. 1910 ஆம் ஆண்டு பிறந்த அன்னை தெரேசாவின் 100 ஆவது ஆண்டு பிறந்த தின நினைவுநாளை 2010 ஆம் ஆண்டில் அல்பேனியாவில் அனுஷ்டிக்க விரும்புவதாலேயே அவரது புனித சடலத்தை தம்மிடம் தருமாறு அல்பேனியா கேட்டுள்ளது.

இந்தியாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அன்னை தெரேசாவின் புனித சடலத்தை தமது நாட்டிடம் ஒப்படைக்கு மாறு அல்பேனிய நாட்டின் பிரதமர் ஸாலி பெரிஷா இந்திய அரசாங் கத்திடம் கேட்டுள்ளார்.

அல்பேனியாவில் பிறந்த அன்னை தெரேசா சமூகப் பணிகளுக்கு தம்மை அர்ப்பணித்து

எனினும், இந்தியத் தரப்பில் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நாடாளுமன்றக் கூரையில் 'கிறீன்பீஸ்' அமைப்பினர்



காலநிலை மாற்றம் தொடர்பான விஞ்ஞாபனத்தில் திருத்தங்களை மேற்கொள்ளு மாறு கூறி 'கிறீன்பீஸ்' எனப்படும் சூழல் காப்பு அமைப்பின் அங்கத்தவர்கள் ஐம்பது பேர் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கூரையின்மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் கோப்பன்ஹேகனில் காலநிலை தொடர்பான மாநாட்டிற்கு முன்னதாக தமது யோசனைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு சூழல் பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டும் என்று மேற்படி 'கிறீன்பீஸ்' அமைப்பினர் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப் பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் பலவிதமான சுலோகங் களை ஏந்தியவாறும் காணப்பட் டமையும் குறிப்பிடத்தக்கது.



Atlas
...be creative!
இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புகள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் சிலோன் பென்சில் நிறுவனத்தால் (அட்லஸ்) பரிசாக வழங்கப்படும்.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# மாலைதீவில் கடலுக்கடியில் அமைச்சரவைக் கூட்டம்



புவி வெப்பமடைதலின் மூலமாக மாலைதீவிற்கு ஏற்பட வுள்ள ஆபத்தை உலகிற்கு உணர்த்தும் நோக்கில் கடலுக்கடி யில் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளார் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட்.

புவி வெப்பமடைதலினால் கடல் நீர்மட்டம் உயர்வடைந்து மாலைதீவுகள் கடலில் மூழ்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட் டுள்ளமையினால் டென்மார்க்கில் கொப்பன்ஹேர்கன் நகரில் நடைபெறவுள்ள காலநிலை தொடர்பான மாநாட்டில் இது தொடர்பான தீர்மானங்களை எடுக்கச் செய்யும் விதமாகவே இவ்வாறான கவனார்ப்பு மாநாடொன்றை கடலுக்கடியில் நடத்தியதாக மாலைதீவு ஜனாதிபதி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு அரசாங்கத்தினதும் மக்களதும் மனநிலையை பிரதிபலிக்கும் விதமாக கடலின் அடியில் பதாதையொன்றை வைக்குமாறு நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்டுள்ள சூழல் பாதுகாப்பு அமைப்பொன்று வழங்கிய ஆலோசனையை கவனத்தில் கொண்டு அதனையும்விட மற்றுமொரு படி முன்னேறிச் சென்று கடலுக்கடியில் அமைச்சரவைக் கூட்டத்தையே நடத்தி முடித்துள்ளார் மாலைதீவு ஜனாதிபதி என்று கூறப்படு கின்றது.

## அற்லஸ் கேள்வி - 227

**கேள்வி:** அன்னை தெரேசா பிறந்த நாடு எது?

சரியான விடை..............................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 227,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 225 இன் சரியான விடை: எச்டோவாஸ்

**பரிசு பெறுவோர்**

ச.பிரகலாதன்,
36/1, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.

பி.வான்மதி,
54, இராமநாதன் வீதி,நாயன்மார்கட், யாழ்ப்பாணம்.

எஃப்.இன்ஷாரா,
295/3, வில்லியம் மாவத்தை, மிரிஸ்வத்தை, பலாங்கொடை.

# உலகிலேயே பரபரப்பான விமான நிலையம்



உலகிலேயே மிகவும் பரபரப்பாக இயங்கு கின்ற விமான நிலையமாக அமெரிக்காவின் 'ஜோன்.எஃப்.கென்னடி' சர்வதேச விமான நிலையம் கருதப்படுகின்றது. இந்த விமான நிலையம் எவ்வாறு அமைக்கப்பட்டது தெரியுமா?'ஐடில் வைட்' என்ற'கொல்ஃப்' விளையாட்டு மைதானமே இவ்வாறு விமான நிலையமாக மாற்றியமைக்கப்பட் டுள்ளது. இதனால்,

ஆரம்பத்தில் 'ஐடில் வைட்' விமான நிலையம் என்றே இந்த விமான நிலையம் அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் 1963 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அவரது நினைவாகவே குறித்த 'ஐடில் வைட்' விமான நிலையம் 'ஜோன் எஃப் கென்னடி சர்வதேச விமானநிலையம்' என்று பெயர் மாற் றப்பட்டது. இன்றுவரையில் இந்த விமான நிலையம் உலகிலேயே பரபரப்பாக இயங்கி வருகின்ற விமான நிலையமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# சிக்கல் நிறைந்த போக்குவரத்துப் பாதை

உலகிலேயே மிகவும் சிக்கல் நிறைந்த போக்குவரத்துப் பாதையாக கருதப்படுவது அமெரிக்காவின் டெக்ஸாஸில் என்ற நகரத்தில் உள்ள 'இன்டர்ஸ்டேட் ஹைவேஸ்' எனப்படும் அதிவேகப் பாதையாகும். கலிஃபோர்னியா மாநிலம் தொடக்கம் ஃபுளோரிடா மாநிலம் என்று பல மாநிலங்களையும் தொட்டுச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஒரே நெடுந்தூர போக்குவரத்துப் பாதை என்று இது கருதப்படு கின்றது.


என்றாலும் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 'இவான்' என்ற சூறாவளியினால் 'ஃபுளோரிடா' மாநிலப் பகுதியில் அமைந்திருந்த இந்த வீதியின் பகுதிகள் அழிவடைந்தன. அதனைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு 'கெத்தரினா' என்ற மற்று மொரு சூறாவளி வீசியதாலும் இந்த வீதியின் மிகுதிப் பகுதி களும் அழிவுற்றன.

பின்னர் இந்தப் பாதை புனரமைக்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டு இருவழிப்பாதையாக மீள்உருவாக்கம் பெறச் செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நான்கு வழிப்பாதையாகவும் பின்னர் ஆறு வழிப்பாதையாகவும் அபிவிருத்தி செய் யப்பட்டது. தற்போது இந்த போக்குவரத்துப்பாதை கலிஃபோர்னியா மாநிலத்திலிருந்து அரிசோனா, நியூமெக்ஸிக்கோ, டெக்ஸாஸ், லூசியானா, மிஸி ஸிப்பி, அலபாமா, ஃபுளோரிமா ஆகிய மாநிலங் களினூடாக செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் பாடசாலைக்குச் சென்று வந்த சுனிலுக்கும் அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

**අම්මා: එන්න පුතා කොහොමද ඔයාගේ පාසල?**
என்ன புதா கொஹொமத ஒயாகே பாசல?
அம்மா: வாங்க மகன் எப்படி உங்களுடைய பாடசாலை?

**පුතා: පාසල හොඳයි අම්මේ.**
பாசல ஹொந்தய் அம்மே.
மகன்: பாடசாலை நல்லது அம்மா.



**අම්මා: පුතාගේ ගුරුතුමිය කොහොමද?**
புதாகே குருதுமிய கொஹொமத?
அம்மா: மகனுடைய ஆசிரியை எப்படி?

**පුතා: ගුරුතුමිය හරි හොඳයි; හරි ලස්සනයි.**
குருதுமிய ஹரி ஹொந்தய்; ஹரி லஸ்ஸனய்.
மகன்: ஆசிரியை மிகவும் நல்லவர்; மிகவும் அழகானவர்.

**අම්මා: ගුරුතුමිය මොනවද ඇහුවේ?**
குருதுமிய மொனவத எஹுவே?
அம்மா: ஆசிரியை என்ன கேட்டார்?

**පුතා: මගේ නම ඇහුවා; අම්මා-තාත්තාගේ නම ඇහුවා.**
மகே நம எஹுவா; அம்மா-தாத்தாகே நம எஹுவா.
மகன்: என்னுடைய பெயரைக் கேட்டார்; அம்மா-அப்பாவின் பெயர்களைக் கேட்டார்.

**අම්මා: ඉතින් පුතා නම කිව්වද?**
இதின் புதா நம கிவ்வத?
அம்மா: இனி மகன் பெயரை சொன்னீர்களா?

**පුතා: ඔව් මම කිව්වා.**
ஒவ் மம கிவ்வா.
மகன்: ஆம் நான் சொன்னேன்.

**අම්මා: පාඩම් මොකුත් කියල දුන්නද?**
பாடம் மொகுத் கியல துன்னத?
அம்மா: பாடம் எதுவும் சொல்லித் தந்தார்களா?



**පුතා: ඔව්. කතන්දර, කවි කියල දුන්නා.**
ஒவ். கதந்தர, கவி கியல துன்னா.
மகன்: ஆம். கதை, கவிதை சொல்லித் தந்தார்.

**අම්මා: මොන කතන්දරයක්ද කියල දුන්නේ?**
மொன கதந்தரயக்த கியல துன்னே?
அம்மா: என்ன கதை சொல்லித் தந்தார்?

**පුතා: කපුටා සහ වඩේ.**
கபுடா சஹ வடே.
மகன்: காகமும் வடையும்.

**අම්මා: ආ පුතා ඒ කතන්දරය දන්නවනේ?**
ஆ புதா ஏ கதந்தரய தன்னவனே?
அம்மா: ஆ மகனுக்கு அந்தக் கதை தெரியும்தானே?

**දැන් එන්න කෑම කන්න.**
தென் என்ன கேம கன்ன.
இப்போது சாப்பிட வாருங்கள்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: பாடசாலை நல்லது.
**පාසල හොඳයි.**

i. ஆசிரியை அழகானவர்.
..................................................
ii. கதை சொல்லித் தந்தார்.
..................................................
iii. சாப்பிட வாருங்கள்.
..................................................






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (**Pronouns**) பதிலாக, பெயர்ச்சொற்களை (**nouns**) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்படும் உடன்பாடு வாக்கியங்களிலும், '**Do**' எனும் நிகழ்கால வினைச்சொல் '**Does**' என மாற்றம் பெறுவதை இங்கே அவதானிக்கலாம்.

(அ) Ranjith did his work yesterday. (Past Tense)
ரஞ்ஜித் தனது வேலையை நேற்றுச் செய்தான்.
(Ranjith did - ரஞ்ஜித் செய்தான் - இறந்தகாலம்)

(ஆ) Ranjith does his work daily. (Present Tense)
ரஞ்ஜித் தனது வேலையை தினமும் செய்கின்றான்.
(Ranjith does - ரஞ்ஜித் செய்கின்றான் - நிகழ்காலம்)

---

(இ) Lalitha did her work yesterday. (Past Tense)
லலிதா தனது வேலையை நேற்றுச் செய்தாள்.
(Lalitha did - லலிதா செய்தாள் - இறந்தகாலம்)

(ஈ) Lalitha does her work daily. (Present Tense)
லலிதா தனது வேலையை தினமும் செய்கின்றாள்.
(Lalitha does - லலிதா செய்கின்றாள் - நிகழ்காலம்)

---

(உ) This dog did its work yesterday. (Past Tense)
இந்த நாய் தனது வேலையை நேற்றுச் செய்தது.
(This dog did - இந்த நாய் செய்தது - இறந்தகாலம்)

(ஊ) This dog does its work daily.
இந்த நாய் தனது வேலையை தினமும் செய்கின்றது.
(This dog does - இந்த நாய் செய்கின்றது - நிகழ்காலம்)

---

✱ **வேறு சில வாக்கியங்களையும் இங்கே அவதானிப்போம்.**

(அ) Yesterday my brother did his work neatly. (Past Tense)
நேற்று எனது சகோதரன் தனது வேலையை நேர்த்தியாகச் செய்தான்.
(My brother did - எனது சகோதரன் செய்தான் - இறந்தகாலம்)

(ஆ) My brother always does his work neatly. (Present Tense)
எனது சகோதரன் தனது வேலையை எப்பொழுதும் நேர்த்தியாகச் செய்கின்றான்.
(My brother does - எனது சகோதரன் செய்கின்றான் - நிகழ்காலம்)

(இ) Yesterday my sister did her work carefully. (Past Tense)
நேற்று எனது சகோதரி தனது வேலையை கவனமாகச் செய்தாள்.
(My sister did - எனது சகோதரி செய்தாள் - இறந்தகாலம்)

(ஈ) My sister always does her work carefully. (Present Tense)
எனது சகோதரி தனது வேலையை எப்பொழுதும் கவனமாகச் செய்கின்றாள்.
(My sister does - எனது சகோதரி செய்கின்றாள் - நிகழ்காலம்)

(உ) Yesterday our dog did its work properly. (past Tense)
நேற்று எங்கள் நாய் தனது வேலையை முறையாகச் செய்தது.
(Our dog did - எங்கள் நாய் செய்தது - இறந்தகாலம்)

(ஊ) Our dog always does its work properly. (Present Tense)
எங்கள் நாய் தனது வேலையை எப்பொழுதும் முறையாகச் செய்கின்றது.
(Our dog does - எங்கள் நாய் செய்கின்றது - நிகழ்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முட்டாள் அரசன்

முன்னொரு காலத்தில் முட்டாள் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன்னைப் போலவே முட்டாள் ஒருவனை அமைச்சராக்கினான். அரசனுக்குத் திடீரென்று வேட்டைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. "அரசே, இதுவரை யாரும் காட்டிற்குச் சென்று எலி வேட்டையாடியதில்லை. எல்லா வேட்டைகளிலும் கடினம் எலி வேட்டைதான். அதே சமயம் ஆபத்தும் இல்லாதது. நீங்கள் மட்டும் வெற்றி வீரராகத் திரும்பினால் இந்த உலகமே உங்களைப் பார்த்துப் புகழும்" என்றான் முட்டாள் அமைச்சன். அரசனும் இதை ஏற்றுக் கொண்டான்.

"நான் வேட்டையிலிருந்து திரும்பும் வரை ஆட்சியைக் கவனித்துக்கொள்" என்று சொல்லி விட்டு வீரர்கள் புடைசூழ எலி வேட்டைக்குப் புறப்பட்டான் அரசன். மறுநாள் அரண்மனை அந்தப்புரத்திலிருந்து அரசியை நல்ல பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. மயங்கி விழுந்த அரசியைச் சோதித்த மருத்துவர்கள், "நஞ்சு தலைக்கு ஏறி விட்டால் அரசி உயிர் பிழைப்பது கடினம்" என்றனர். இந்தச் செய்தி உடனே அமைச்சனுக்குத் தெரிவிக்கப்பட்டது. என்ன செய்வது என்று சிந்தித்தான் அவன். அருமையான யோசனை அவனுக்குத் தோன்றியது.

வீரர்களைப் பார்த்து, "பாம்பின் நஞ்சு அரசியின் தலைக்கு ஏறுவதற்குள் அரசியாரின் தலையை வெட்டிப் பாதுகாப்பாக வையுங்கள். எப்படி அரசியார் இறக்கிறார் என்று பார்த்து விடுகிறேன்"என்று கட்டளையிட்டான்.

வீரர்களும் அரசியின் தலையை வெட்டித் தனியே வைத்தனர். அரசியாரைக் கடித்த பாம்பை அடிக்க வீரர்கள் விரட்டிச் சென்றனர். ஆனால். அந்தப் பாம்பு ஒரு வீட்டிற்குள் புகுந்து மறைந்து கொண்டது. உள்ளே நுழைய வீரர்கள் பயந்தனர். நடந்ததை அறிந்த அமைச்சன். அந்த வீட்டைக் கொளுத்துங்கள். பாம்பு சாகட்டும். என்று ஆணையிட்டான். உடனே வீடு கொளுத்தப்பட்டது. நாலாபுறமும் காற்று வீசிக் கொண்டிருந்ததால் தீ தலைநகர் முழுவதும் பிடித்துக் கொண்டது. ஊர் மக்கள் அனைவரும் அலறினர்.

"கவலைப்படாதீர்கள் என்ற அமைச்சன் நகரத்தின் நீர் தேவைக்காக இருக்கும் ஏரியை உடைத்து விடச் சொன்னான். அதே போல் ஏரி உடைக்கப்பட்டது. ஏரி நீர் நகரத்திற்குள் புகுந்து தீயை அணைத்தது. தன் அறிவுக் கூர்மையால் மக்களின் துன்பத்தைப் போக்கிவிட்டோம் என்று மகிழ்ந்தான் அமைச்சன்.

அவன் மகிழ்ச்சி ஒரு நாள் கூட நீடிக்கவில்லை. "ஏரியில் நீர் இல்லாததால் நெற்பயிர்கள் வாடுகின்றன" என்று மக்கள் முறையிட்டனர்.

"எதனால் பயிர் வாடுகிறது?" என்று கேட்டான் அமைச்சன்.

"சூரியனுடைய வெப்பத்தைத் தாங்க முடியாமல் வாடுகின்றன" என்று பதில் தந்தான் ஒருவன்.

"அப்படியா? கதிரவனின் கதிர்கள் பயிரைத் தாக்காமல் இருக்க நாட்டிலுள்ள மரங்களை எல்லாம் வெட்டிப் பயிர்களுக்குப் பந்தல் போட்டு விடுங்கள்" என்றான். மக்களும் அவ்வாறே செய்தனர். இவ்வாறாக முட்டாள் அமைச்சன் மூன்றே நாளில் நாட்டைச் சுடுகாடாக்கி விட்டான். அதனால் முட்டாளாக இருக்காமல் அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.



# பைக் மீனின் கட்டளைப்படி

ரஷ்ய நாட்டுக்கதை

02

சிறிதுகாலம் சென்றதும் எமில்யாவின் அண்ணிகள் அவனிடம் கூறினார்கள்; "ஏன் சூட்டடுப்பின் மீது படுத்திருக்கிறாய் எமில்யா? போய் நமக்குக் கொஞ்சம் விறகு வெட்டி வா"

"நான் வெட்டி வரமாட்டேன். எனக்கு இதில் விருப்பம் இல்லை" என்றான் எமில்யா.

"நாங்கள் சொல்வது போல நீ செய்யவில்லை என்றால், உன் அண்ணன்கள் சந்தையிலிருந்து உனக்கு எந்தப் பரிசும் கொண்டுவர மாட்டார்கள்"

சூட்டடுப்புப் பரணை விட்டுப் போக எமில்யா விருப்பமின்றி இருந்தான். பைக் மீன் நினைவுக்கு வரவே, மெல்லிய குரலில் கூறினான்;

"பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! கோடரியே, போய் விறகு வெட்டு! விறகே வீட்டிற்குள்ளாக வந்து சூட்டடுப்பின் உள்ளே செல்லுங்கள்"

உடனே பெஞ்சுக்கு அடியிலிருந்த கோடரி தாவி வெளியே உள்ள முற்றத்திற்குச் சென்று விறகு வெட்டத் தொடங்கியது. விறகுகள் அவையாகவே குடிசைக்குள்ளாக வந்து சூட்டடுப்பின் உள்ளே தாவின.




சிறிது காலம் சென்றதும், எமில்யாவின் அண்ணிகள் அவனிடம் கூறினார்கள்;

"எமில்யா, நம்மிடம் விறகே இல்லாமல் போய் விட்டது. காட்டுக்குப் போய் கொஞ்சம் விறகு வெட்டி வா"

சூட்டடுப்புப் பரண் மீது படுத்திருந்த எமில்யா இதற்குப் பதிலளித்தான்;

"நீங்கள் எதற்காக இருக்கிறீர்கள்?"

"எமில்யா, என்ன சொல்கிறாய் நீ?" எனக் கேட்டனர் எமில்யாவின் அண்ணிகள்.

"விறகுக்காகக் காட்டுக்குப் போவது எங்களுடைய வேலையல்ல" என்றனர் அவர்கள்.

"ஆனால் இந்த வேலையைச் செய்ய எனக்கு விருப்பம் இல்லை" என்றான் எமில்யா.

"நீ இந்த வேலையைச் செய்யாதுவிட்டால் உனக்கு எந்தப் பரிசுகளும் கிடைக்காது" என்று அவனிடம் சொன்னார்கள் அவனின் அண்ணிகள்.

வேறொன்றும் செய்வதற்கில்லை. ஆகவே, எமில்யா சூட்டடுப்பினின்றும் கீழே இறங்கி, தனது காலணிகளையும் நீண்ட மேற்சட்டையையும் அணிந்துகொண்டான். கயிறும் கோடரியும் எடுத்துக்கொண்டு, முற்றத்திற்குச் சென்று, 'ஸ்லெட்ஜ்' வண்டியில் ஏறிக்கொண்டு கத்தினான்;

"அண்ணிகளே, கடவையைத் திறவுங்கள்"

அண்ணிகள் அவனிடம் கூறினார்கள்; "குதிரையைப் பூட்டாமல் 'ஸ்லெட்ஜ்' வண்டியில் ஏறி என்ன செய்து கொண்டிருக்கிறாய், முட்டாளே?"

"குதிரை இல்லாமல் என்னால் போகமுடியும்" என்று எமில்யா பதிலளித்தான். அவனது அண்ணிகள் கடவையைத் திறந்துவிட்டனர். எமில்யா மெல்லிய குரலில் கூறினான்;

> எமில்யா கயிறும் கோடரியும் எடுத்துக்கொண்டு, முற்றத்திற்குச் சென்று, 'ஸ்லெட்ஜ்' வண்டியில் ஏறிக்கொண்டு கத்தினான்

"பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! 'ஸ்லெட்ஜ்' வண்டியே காட்டிற்குப் போ"

உடனே 'ஸ்லெட்ஜ்' வண்டி கடவை வழியாக விரைவாகச் சென்றது. குதிரை மீது சென்றால்கூட அவ்வளவு வேகமாகப் போகமுடியாது.

காடு செல்லும் பாதை நகரத்தின் வழியாகச் சென்றது. 'ஸ்லெட்ஜ்' வண்டி பலரை இடிக்கவும் நசுக்கவும் செய்தது. "பிடியுங்கள் அவனைப் பிடியுங்கள்" என்று நகரமக்கள் கத்தினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினேஷ்காந்தன் டென்னிஸில் வெற்றி

சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்தின் 18 வயதிற்கு கீழானோருக்கான தனிநபர் டென்னிஸ் போட்டிகளின் இறுதிப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தினேஷ் காந்தன் தங்கராஜ் வெற்றியீட்டியுள்ளார்.

8 நாடுகளைச் சேர்ந்த கனிஷ்ட போட்டியாளர்களை தரப்படுத்து கைக்கு உட்படுத்தும் மேற்படி போட்டிகள் கொழும்பு, டென்னிஸ் சம்மேளன தலைமையகத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் கொரியாவைச் சேர்ந்த வுங்க்ஹை என்ற வீரரை 7-5, 6-3 என்ற நேர்செட் கணக்கில் தோற்கடித்தே இலங்கை வீரர் தினேஷ்காந்தன் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற் றினார்.

இப்போட்டிகளில் இலங்கை, இந்தியா, தாய்லாந்து, பிரிட்டன், கொரியா, பாகிஸ்தான், ஈரான், சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 88 போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்சிக்கு "பேஸ்போல்" வீரர்



இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் களத்தடுப்புத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக முன்னாள் 'பேஸ்போல்' விளையாட்டு வீரர் ஒருவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கெவின் ஃபின்கல்ஸன் என்பவரே இவ்வாறு பயிற்சிகளை வழங்கவுள்ள வராவார்.

மேலும், இவர் 19 வயதிற்கு கீழான கிரிக்கெட் அணியினருக்கும் மேற்படி பயிற்சிகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரவுள்ள இவருடன் இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்று னர்கள் சிலர் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வர். அதனைத் தொடர்ந்து இலங்கையின் இடைக்கால கிரிக்கெட் சபையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களையும் இவர் மேற்கொள்வார்.

தற்போது அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் பிராந்திய அணிக்கு களத்தடுப்புப் பயிற்சியாளராக பணியாற்றி வருகின்ற கெவின் ஃபின்கல்டன் முன்னாள் பேஸ்போல் (Base Ball) விளையாட்டு வீரர் மட்டுமன்றி, பயிற்றுனராகவும் இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுனர் டிரெவர் பேலிஸ் அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே களத் தடுப்பு(Fielding) பயிற்சிகளை வழங்கு வதற்காக கெவின் அவர்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபை அழைப்பு விடுத் துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

## மின்சாரத்தை சேமிப்போம்


### போட்டி இல - 11

### தலா ரூ.1,000 பணப்பரிசை வெல்லும் வாசகர்கள் வருமாறு;

டி.இல்மா, 02, அன்டியாகடவத்த, கம்பளை.
எஃப்.அஃப்ரா, 436, புது தெரு, வெலிகம.
ஆர்.சிவநேசன்,
ஸ்ட்ரெதஸ் தோட்டம், லெட்புரோக் டிவிஷன், சாமிமலை.
டி.ரொபின்சன் லெம்பர்ட்,
வலயம்-4F1 18, வெண்குல செட்டிக்குளம், வவுனியா.
டி.சதுர்ஜன்,
42/3, சிவன் கோவில் ஒழுங்கை, தோணிக்கல்,வவுனியா.
பிறைசூடி ஹேம்குமார்,
32, கல்லூரி வீதி, பூந்தோட்டம், வவுனியா.
பூபதி வினோஜ்,
தெஹியோவிட தோட்டம், தெஹியோவிட்ட.
ரா.ரமேஷ் ராஜா, உடரதெல்ல தோட்டம், நானுஓயா.
கௌஷல்யா, 969, மாலபே வீதி, பன்னிபிட்டி.
ஏ.ஆரியரத்ன, முருதாமுரய, ஹக்மன.
குமாரி, மாலபே வீதி, கொட்டாவ.
என்.சந்தமாலி, அரசமர சந்தி, கடுவன.
தில்ஹானி, கதிரான, திம்பிரிகஸ்கடுவ, மீகமுவ.
யசங்கி, 31/2, அம்பன்பொல, மாத்தளை.
இரேஷா, ஹால்பத்தேனிய, மெதெரிபிட்டிய, தெனியாய.
விராஜ், ஜலாஷய வீதி, கண்டி.
சரசி, 510/2, பிலவல இல்லம், அலவத்துகொடை.
ஹரிஷிகா, 246, கொட்டிகாவத்தை, அங்கொடை.
கவிந்து, திக்கேலே சிறுவர் மத்திய நிலையம், பன்னல.
வாசனா, 100/1B, மீகஹவத்த தெல்கோட.
நிஷேல், 561, காலி வீதி, பலபிடிய.
சுஜானி, இத்தகெடியவில, வீரபான.
தாருகா, 147/1, மண்டாவல.
மதுஷா, 8B, 63/3, வீட்டுத்திட்டம், மத்தேகொட.
அபீஷ சிதும்ஜித், இல-79/11, குருணாகல வீதி, சிலாபம்.
திலினி, ரத்மலே, மாத்தறை.
சமரசிங்க, எம்பிலிபிட்டிய, பல்லேகம.
ஹரிந்து, 02, மாத்தளை.
இஷாரி, 178/A, வெலிகம.
ஸ்ரீமதி, அடுக்கன, வெல்லவ.
கௌரி, களுவர வீதி, ஹிருஸ்ஸாகல, கண்டி.
ஷெல்டன், தம்பவடவன 02, கலேவெல.
தரிந்து, 09, கொஸ்கஹகும்புர, தியதலாவ.
ஷானிகா, அம்பேகமுவ, உடபுளத்கம.
ஸ்ரீமாலி, மொரகல, கிரிவிபன.
ப்ரமோத்யா,
07,பெரமவுன்ட் பார்க்,கபுஹேம்பல, ஹக்மன.
நிர்மானி, குல்போன் வீதி, அம்பகமுவ, உடபுளத்கம.
மனோத்யா, 311/1, நவகுருகெலே, கம்பளை.
எம்.ஹிருனி ஷானிகா, 80/7, சீதுவ வடக்கு, சீதுவ.
எம்.நதீஷ நிர்மால், 71/A5, தம்பதுரய, சீதுவ.

## வியட்நாமில் உள்ளக விளையாட்டுப் போட்டிகள்





வியட்நாமில் இந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை சார்பாக 29 பேரைக் கொண்ட குழுவொன்று இம்மாதம் 28 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மெய்வல்லுனர், குத்துச்சண்டை, செஸ், கபடி (ஆண்கள்), நீச்சல், வுஷு (ஆண்/பெண்) போட்டியாளர்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. செஸ் வீரர் அத்துல ரஸப்ட் என்பவரே இந்த இலங்கை குழுவிற்கு தலைமை வகிக்கின்றார்.

மேற்படி, போட்டிகளுக்கான விஜயத்திற்காக ரூபா 23 லட்சம் நிதி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு எந்தவொரு அனுசரணையாளரும் கிடைக்காவிட்டால் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதியுதவியுடன் மேற்படி அணி தனது விஜயத்தை மேற்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆரம்பமாகி நொவெம்பர் 08 ஆம் திகதி வரை நடைபெறுகின்ற மேற்படி போட்டிகளில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகள் கலந்துகொள்கின்றன.

சார்க் விளையாட்டுக்கள்:

## இலங்கை சைக்கிள் ஓட்ட வீரர்கள் தெரிவு

**பங்களாதேஷின் 'டாக்கா' நகரில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள 11 ஆவது சார்க் விளையாட்டுப் போட்டியில் சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியினரின் பெயர் பட்டியலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 12 ஆண் போட்டியாளர்களும் 6 பெண் போட்டியாளர்களும் அடங்குகின்ற இக்குழுவிற்கு விளையாட்டுத் துறையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.**



**2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்ற 10 ஆவது சார்க் விளையாட்டுக்களில் சைக்கிள் ஓட்டத்தில் இலங்கை அணி கூடிய திறமைகளை வெளிப்படுத்தி ஐந்து தங்கப்பதக்கங்களையும், நான்கு வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வெற்றி கொண்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.**

**எனவே, 11 ஆவது போட்டியிலும் இலங்கை அணியினர் அதிகூடிய பதக்கங்களை எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கருதப்படுகின்றது.**

## "கொல்ஃப்" களத்தில் தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச 'கொல்ஃப்' தரப்படுத்தல் பட்டியலில் ஆடவர் பிரிவில் முதல் நிலை வீரராக அமெரிக்காவின் டைகர் வுட்ஸ்ஸும், மகளிர் பிரிவில் முதல்நிலை வீராங்கனையாக மெக்ஸிக்கோவின் லொரினா ஒச்சாயோ ஆகியோர் திகழ்கின்றனர்.

கடந்த காலங்களில் கொல்ஃப் களத்தில் சிறப்பாக தமது திறமையை வெளிக்காட்டி வருகின்ற இவர்கள் 'கொல்ஃப்' போட்டியாளர்களில் அதிகளவிலான பணத்தை ஈட்டிவருகின்றவர்களாகவும் கருதப்படுகின்றனர்.





ஆடவர் பிரிவில் டைகர்வுட்ஸுக்கு அடுத்ததாக அமெரிக்காவின் ஸ்டீவ் ஸ்டிக்கரும் மூன்றாவது இடத்தில் ஃபில் மிக்கல்ஸனும் உள்ளனர். மகளிர் பிரிவில் லொரினாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் கொரியாவின் ஜீயாய் ஷின்னும் மூன்றாவது இடத்தில் சுசான் பெட்டர்ஸனும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு நாடு தாவும் குரங்குக் காய்ச்சல்



விதம் விதமான காய்ச்சல்கள் காலத்துக்குக் காலம் உலகையே உலுக்கிக்கொண்டிருக்கின்றன. டெங்கு, மலேரியா என நுளம்புகளால் பரவும் ஆட்கொல்லி நோய்களுடன் இணைந்து, பறவைக்காய்ச்சல், எலிக் காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் என அந்தப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இன்றளவில், உலகையே பன்றிக்காய்ச்சல் ஆட்டிப்படைக்கும் சூழலில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் புதிய ஆட்டத்தைத் தொடங்கியுள்ளது 'குரங்குக் காய்ச்சல்'. தற்போது மலேசியாவில் பெருமளவில் ஆட்டம் காட்டுகின்ற குரங்குக் காய்ச்சலால் ஒருசிலர் உயிரிழந்துவிட்டனர். அங்கிருந்து இந்தோனேஷியாவுக்குத் தாவிய குரங்குக் காய்ச்சலானது அண்டை நாடுகளையும் பீதியில் தள்ளியுள்ளது.

## அதென்ன குரங்குக் காய்ச்சல்?

குரங்குகளைத் தாக்கி நோய்வாய்ப்பட வைக்கும் 'ப்ளஸ்மோடியம் நோலெஸி' எனும் ஒருவித வைரஸ் மூலம் மனிதர்களுக்கும் பரவும் நோய்தான் 'ப்ளஸ்மோடியம் நோலெசி மலேரியா' *(Plasmodium knowlesi malaria)*. இதற்கு நாம் வழங்கும் பெயர்தான் 'குரங்குக் காய்ச்சல்'. 'ப்ளஸ்மோடியம் நோலெஸி' என்பது குரங்கினங்களுக்கு மலேரியாவை ஏற்படுத்தக்ககூடிய ஒருவித வைரஸாகும்.

## எவற்றைத் தாக்குகின்றது?

இந்த வைரஸ் எல்லா வகை குரங்குகளையும் தாக்குவதில்லை. மாறாக, 'Macaques' வகையைச் சேர்ந்த நீண்ட மற்றும் குட்டை வால் குரங்குகளை மட்டுமே தாக்குகிறது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட குரங்குகளுக்கு மலேரியாக் காய்ச்சல் வரும். இவ்வாறான மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள குரங்குகளைக் கடிக்கும் *Anopheles leucosphyrus* வகை நுளம்புகள் மனிதர்களையும் கடித்தால், அவர்களுக்கும் குரங்குக் காய்ச்சல் எளிதில் தொற்றிக்கொள்ளும்.

குரங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு இந்த நோய் பரவுவதால் இந்த நோய் 'மங்கி மலேரியா' என்றும் அழைக்கப்படுகின்றது.

## குரங்குக் காய்ச்சல் பற்றிய ஆதாரங்கள்

குரங்குக் காய்ச்சல் தொடர்பான பீதி அண்மைக் காலத்தில்தான் பரவலாக உணரப்பட்டாலும், இது பற்றிய ஆராய்ச்சிகள் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டன. 1931 இல் சிங்கப்பூரில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட நீண்டவாலுடைய Macaques வகை குரங்குக்கு 'மலேரியாக் காய்ச்சல் இருக்கிறதா?' என்று பரிசோதனை செய்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. அத்துடன், முதன்முதலில் குரங்குக் காய்ச்சலால் மனிதன் பாதிக்கப்பட்டது 1965 இல்தான். அதன்படி, அமெரிக்காவில் இருந்து மலேசியா சென்று திரும்பிய பயணி ஒருவருக்குத்தான் குரங்குக் காய்ச்சல் இருந்தது முதன்முதலில் உறுதி செய்யப்பட்டது. இதன்பின் குரங்குக் காய்ச்சல் பற்றி எந்தவொரு தகவல்களும் வெளியாகவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அதாவது, 39 ஆண்டுகள் கழித்து 2004 ஆம் ஆண்டிலேயே குரங்குக் காய்ச்சல் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தது. அப்போது மலேரியா அறிகுறிகளுடன் மலேசியாவில் பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட 208 நோயாளிகளைப் பரிசோதனை செய்ததில் 58 பேருக்கு குரங்குக் காய்ச்சல் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது. அதே காலகட்டத்தில் சீனாவில் 4 பேருக்கும் தாய்லாந்தில் 5 பேருக்கும் பிலிப்பைன்ஸில் 8 பேருக்கும் சிங்கப்பூரில் 12 பேருக்கும் குரங்குக் காய்ச்சல் தொற்றியிருப்பது அறியப்பட்டதோடு, உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. அதன் பின்னர் 5 ஆண்டுகளுக்குப் பின், இப்போதுதான் மலேசியாவில் மீண்டும் குரங்குக் காய்ச்சல் தொற்று ஏற்படத் தொடங்கியுள்ளது.

## இன்றைய நிலை

கடந்த ஆண்டு முதல் இப்போது வரை மலேசிய மருத்துவமனைகளில் மலேரியாக் காய்ச்சல் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்ட 150 பேரில், மூன்றில் இரு பங்கு நபர்களுக்கு குரங்குக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களில் இருவர் பலியானதை அடுத்து, பன்றிக்காய்ச்சல் உண்டாக்கிய பீதியை இக்காய்ச்சலும் ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பகாலத்தில் மலேசியாவில் மட்டுமே இனங்காணப்பட்ட குரங்குக் காய்ச்சல் இப்போது இந்தோனேஷியா, தாய்லாந்து, மியன்மார் ஆகிய நாடுகளிலும் தலைகாட்டியுள்ளது. இதனால் குரங்குக் காய்ச்சல் பற்றி தென்கிழக்கு ஆசிய நாடுகள் 'சிவப்பு எச்சரிக்கை' விடுத்துள்ளன; தடுப்பு ஆலோசனையிலும் இறங்கிவிட்டன.

''பன்றிக்காய்ச்சலைப் போன்று குரங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவாது. ஆனால், தீவிர பாதிப்புகளை ஏற்படுத்திவிடும்'' என்கின்றனர் மருத்துவர்கள்.

அத்துடன், ''குரங்குக் காய்ச்சலுக்கு சரியான நேரத்தில், முறையான சிகிச்சை செய்யத் தவறினால், சிறுநீரகங்கள் பாதிப்படையலாம்'' என்று எச்சரித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.



## குரங்குக் காய்ச்சல் அறிகுறிகள்

அதிக காய்ச்சல், உடல் வலி, தலைவலி, வாந்தி ஆகிய அறிகுறிகள் மலேரியாக் காய்ச்சலுக்குரிய அறிகுறிகள். இவற்றுடன் குரங்குக் காய்ச்சல் வைரஸ்கள் சீரான ரத்த ஓட்டத்தைக் குறைத்துவிடும். இதனால், மூச்சுத் திணறல் போன்ற பிரச்சினைகள் உண்டாகும். எனவே, காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவரிடம் இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடி சிகிச்சை அவசியம்.

## நோய்த் தாக்கம்


குரங்குக் காய்ச்சல் குணப்படுத்தக்கூடியதே. சாதாரணமாக வரும் மலேரியா காய்ச்சலுக்கும் குரங்குக் காய்ச்சலுக்கும் அறிகுறிகளில் பெரிய வித்தியாசமில்லை என்பதால், இந்த நிலை குழப்பத்தை ஏற்படுத்தும். நுணுக்குக்காட்டி ரத்தப் பரிசோதனை செய்தவுடன் குரங்குக் காய்ச்சல் இருப்பதைக் கண்டறியமுடியாது. மூலக்கூறு பரிசோதனை செய்தால் மட்டுமே இந்த நோயைத் தெளிவாகக் கண்டறிய முடியும்.

''இந்த நோய் தாக்கியவர்களில் 2% பேருக்கு மட்டுமே சிறுநீரகப் பாதிப்புகள் ஏற்படும். குழந்தைகளை இந்த நோய் விரைவில் தாக்கும் அபாயம் உள்ளது. ஆனால், பன்றிக்காய்ச்சலைப் போல இது வேகமாகப் பரவாது. நோய்த்தாக்கம் உள்ள நாடுகளுக்குச் செல்லும்போது நுளம்புக்கடிக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று இந்த நோய் பற்றி ஆய்வு மேற்கொண்ட மலேசிய சவாரக் பல்கலைக்கழக மருத்துவ சுகாதார அறிவியல் துறை பேராசிரியர் பல்பீர்சிங் கூறுகின்றார்.

## இலங்கையைத் தாக்குமா?

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமே காணப்படும் Macaques வகையை சேர்ந்த நீண்ட மற்றும் குட்டை வால் குரங்குகளிடம் மட்டுமே இந்த வைரஸ் தாக்கம் இருக்கும். இந்த நோய்த் தாக்கம் உள்ள மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மூலம் இலங்கையிலும் பரவலாம்.

எனவே, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். அப்படியே பயணித்தாலும் வனவிலங்கு சரணாலயத்துக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்வது நல்லது. அத்துடன், நுளம்பு வலை, நுளம்பு மருந்து என்பனவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் குரங்குக் காய்ச்சலைத் தவிர்க்கலாம் என்றும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

இணைக்க

Flowers

Rainbow

Butterfly

Ladybug

Groundhog

Caterpillar






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.11.04 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 232
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 229 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சஹ்னா, தரம் - 1B,
ஹிஸ்புல்லாஹ் ம.கல்.,
தெலியாகொன்ன.

**போட்டி: 02**
மோ.ஹனுஷியா, தரம் - 7I,
பாக்கியம் தே.கல்., மாத்தளை.

**போட்டி: 03**
மு.சுஜீவன், தரம் - 3,
மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ ச.வித்.,
கல்லடி.

**போட்டி: 04**
ஆர்.குருபரன்,
தரம் - 8B,
இந்துக் கல்.,
மாத்தளை.


**போட்டி: 05**
எஃப்.இஷாரா,
தரம் - 8A,
பாத்திமா பா.ம.வித்,
புத்தளம்.

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## அறிவுக்கு விருந்து 229 விடைகள்

**போட்டி: 02**




**போட்டி: 04**
வம்பு, வயல், வசம், வடை, செயல், வலம், புல், புயல், புயம், செல்வம், சடை, புசல், செல், செல்லம், வம்சம்,வலயம், சலம் போன்ற சொற்களை அமைக்கலாம்.

**போட்டி: 05**

1. M (1000)
2. MM (2000)
3. DCXL (640)
4. XII (12)
5. DII (502)

## இடைவெளியை நிரப்புக

5

1. 25, ......., 30, 34, ........
2. 72, 64, ........, 48, ........
3. ........, 314, 304, ........, 284.
4. ........., ........., 21, ........, 41.

## பின்வரும் படங்களுக்கு வழங்கப்படுகின்ற ஆங்கிலச் சொற்களின் ஆரம்ப எழுத்துக்களில் வட்டமிடுங்கள்

3

1)

w u v

2)

h b d

3)

j p g

4)

t f k

5)

l d b

6)

c z s

7)

a e o

8)

e o u

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக



1



## தடித்த எழுத்துக்களிலுள்ள பிழைகளில் பொருத்தமான சொல்லை இட்டு, குறள்களை திருத்தி எழுதுக

(கண்/உலகத்தோடு/இடும்பை/இன்சொல்/அறிவிலா தார்)

4

1. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம் என்றும் **வீம்பை** தரும்.
   .......................................................
   .......................................................
2. எண்ணென்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும் **முக்கியம்**என்ப வாழும் உயிர்க்கு.
   .......................................................
   .......................................................
3. சிறுமையுள் நீங்கிய **வன்சொல்** மறுமையும் இம்மையும் இன்பம் தரும்.
   .......................................................
   .......................................................
4. **மக்களோடு** ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் **அறிவுடையார்.**
   .......................................................
   .......................................................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கோடை மாளிகை

கோடை மாளிகை (Summer palace) அல்லது சீனமொழியில் யிஹேயுவான் என்னும் மாளிகை சீனாவின் பீஜிங் நகரில் அமைந்துள்ளது. இந்த மாளிகை லொங்கிவிட்டி மலை (Longevity Hill) மற்றும் குன்னிங் ஏரி (Kunning Lake) என்பவற்றிலிருந்தே உருவாக்கப்பட்டுள்ளது. இது சுமார் 2.9 சதுர கிலோமீற்றரில் அமைந்துள்ளது. 2.2 கிலோமீற்றரில் அமைந்துள்ள குன்னிங் ஏரியானது இயற்கையாக அல்லாமல் முற்றுமுழுதாக மனிதரால் உருவாக்கப்பட்டதாகும். இதிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மண், கல் போன்ற சிதைவுகளை உபயோகித்தே இந்த மலை உருவாக்கப்பட்டுள்ளது.

கோடை மாளிகையில் தோட்டங்கள் மற்றும் கலை அம்சங்களைக்கொண்ட பல்வேறு கண்ணைக்கவரும் பொருட்களைக் காணலாம். இந்த மாளிகை 1750 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1860 ஆம் ஆண்டிலும் 1900 ஆம் ஆண்டிலும் பாரிய தாக்குதல்களுக்குள்ளான இந்த மாளிகை 1886 ஆம் 1902 ஆம் ஆண்டுகளில் திருத்தி அமைக்கப்பட்டது. இயற்கையும் செயற்கையும் இணைந்து பார்வையாளர்களை மகிழ்விக்கும் பல அம்சங்களை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இது பிரபல்யம்மிக்க உல்லாசப்பயணத் தலமாகவும் அதேவேளை, பொழுதுபோக்குப் பூங்காவாகவும் இயங்கி வருகிறது. நகரின் எப்பகுதியிலிருந்தும் இலகுவாகச் செல்லக்கூடிய வகையில் பிரதான இடத்தில் இம்மாளிகை அமைந்திருப்பதும் ஒரு சிறப்பாகும்.

# பொம்மைகள் அருங்காட்சியகம்

புதுடில்லியில் உள்ள சர்வதேச பொம்மைகள் அருங்காட்சியகம் பெருந்தொகையான அபூர்வ பொம்மைகளைக் கொண்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தை ஸ்தாபித்தவர் பொம்மை விரும்பியான கே.சங்கர்பிள்ளை என்பவராவார். அரசியல் கேலிச்சித்திரக்காரரான இவர் பொம்மைகளின்மீது கொண்டுள்ள ஆசை காரணமாகவே இதனை உருவாக்கியுள்ளார். ஆடைகள் அணிவிக்கப்பட்ட பொம்மைகள் அதிகமாக உள்ள இடங்களில் இந்த அருங்காட்சியகமும் ஓர் இடமாகத் திகழ்கிறது.

இந்த அருங்காட்சியகத்தின் உட்பகுதி இரண்டு சம பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவுகளிலும் 1000 அடி நீளமான 160 இற்கும் மேற்பட்ட கண்ணாடிப் பெட்டிகள் சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன.



ஒரு பிரிவில் இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளினதும் மற்றப்பிரிவில் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளினதும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான பொம்மைகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொம்மையும் அதன் தோற்றம் ஆடை அணிகலன்கள் குறித்து கவனமான ஆய்வுக்குப் பின் நுணுக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பொம்மைகளில் ஜப்பானிய கபுகி நடனப் பெண், கதகளி அரங்கம், காந்தியடிகளின் தண்டி யாத்திரைக் காட்சி போன்றவையும் இடம்பெற்றுள்ளன. ஏராளமான பொம்மைகள் வெளிநாடுகளிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.







இந்த அருங்காட்சியகம் உருவாவதற்குக் காரணமான ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிடுவது அவசியம். விதம் விதமான பொம்மைகளையும் சிறுவர்கள் வரைந்த ஓவியங்களையும் வைத்து இந்தியாவின் பல இடங்களிலும் கண்காட்சிகளை நடாத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார் சங்கர். டெல்லியில் நடைபெற்ற ஒரு கண்காட்சிக்கு அப்போதைய பிரதமரான ஜவஹர்லால் நேருவும் அவரின் மகள் இந்திராகாந்தியும் வருகை தந்திருந்தனர். அவ்வேளையில், உடைந்துபோன பொம்மைகளுக்காக சங்கர் தனது கவலைகளைத் தெரிவித்து உரையாற்றினார். இதனை செவிமடுத்த இந்திராகாந்தி, ''பொம்மைகளுக்காக நிரந்தர அருங்காட்சியகம் ஒன்று ஏன் இல்லை?'' என்ற கேள்வியை எழுப்பினார். அதனைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு இந்த அருங்காட்சியகம் உருவானது. இந்த அருங்காட்சியகத்தை அப்போதைய பிரதமர் டொக்டர் ராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைத்து, அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டடத்துக்கு 'நேரு ஹவுஸ்' என்று காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பெயரையே வைத்தார்.



# உலகின் உயரமான நாய்?

அமெரிக்காவின் வட டகோட்டாவைச் சேர்ந்த பூமர் உலகின் உயரமான நாய் என்று உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் என நம்பப்படுகிறது. இதன் நிறை 180 இறாத்தலாகும். இது நன்கு வளர்ச்சியடைந்த ஒரு மனிதனின் நிறையாகும். இதன் நீளம் 7 அடி. இதன் உயரம் 36 அங்குலம். இதன் உரிமையாளரான வெபர் இதுபற்றிய குறிப்புகளை 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகத்துக்கு அனுப்ப இருக்கிறார். இதற்கு முன்னர் உயரமான நாய் என்னும் இடத்தை வகித்த நாயின் உயரம் 42 அங்குலமாகும். அது இந்த கோடை காலத்தின்போது இறந்துவிட்டது. பூமர் சாதாரணமாக நின்று கொண்டே அடுக்களை நீர்த்தொட்டியில் ( Sink) நீ அருந்துவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்





# இணையம் அறிமுகமாகி நாற்பது வருடங்கள்



'இன்டர்நெட்' எனப்படும் இணைய சேவை அறிமுகமாகி கடந்த செப்டெம்பர் 2 ஆம் திகதியுடன் 40 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன.

இன்று இன்றியமையாத ஒன்றாக ஆகிவிட்ட இந்த இணையமானது அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழகத்திலேயே அறிமுகமாகியது எனலாம்.




அதாவது 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதியன்று பதினைந்து அடி தூரத்தில் வைக்கப்பட்டிருந்த கணினியொன்றிற்கு சில தரவுகளை அனுப்பியதன் மூலம் இது பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. மேற்படி, கணினி அமெரிக்காவின் 'அப்பானெட்' (Arpanet) என்ற கணினி வலையமைப்பிற்கு உரியதாகவே இருந்தது.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதியுதவிகளைப் பெற்றிருந்த 'அப்பானெட்' வலையமைப்பு, கணினிகளுக்கிடையே தகவல்களை பரிமாறிக் கொள்வதில் புதுப்புது நவீன வழிமுறைகளைப் பற்றி ஆராய்ந்து வந்தது. இந்த ஆராய்ச்சியின் பிரதிபலனாகவே 'டேட்டா கிராம்' எனப்படும் 'பெக்கட் ஸ்விட்ச்' முறையில் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் வழிமுறை பிறந்தது. இன்று இணையச் சேவையில் தகவல் பரிமாற்றம் நடைபெறுவது மேற்படி 'டேட்டா கிராம்' முறையினாலேயாகும். எனவே, 'டேட்டா கிராம்' முறையில் தகவல்களைப் பரிமாறிக் கொண்ட முதல் நாளே இணையத்தின் பிறந்தநாளாக கருதப்படுகின்றது.



தொடர்ந்து இணைய சேவையின் மற்றொரு வளர்ச்சிப்படியின் அடையாளமாக 1969 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதியைக் குறிப்பிடலாம். அதாவது, அன்றைய நாளில்தான் லொஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்த 'ஸ்டென்ஃபர்ட்' ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணையத்தின் வழியே தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இரண்டு தூர இடங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இணையப் பரிமாற்றம் என்பதாலேயே இது முக்கியத்துவம் பெறுகின்றது.

தொடர்ந்து இணையம் அறிமுகமாகி 20 வருடங்கள் கடந்த பின்னர் 1989 இல் மார்ச் மாதம் உலக அளவிலான பரந்த இணைய சேவை பரிணமித்தது. மேலும், இணையத்தின் மற்றொரு வளர்ச்சியாகவே இணையத்தளம் (Website) கருதப்படுகின்றது. இதனை சேர் டிம்பேர்னஸ் என்பவரே அறிமுகம் செய்தார்.

எனினும், ஆராய்ச்சிகள், பரீட்சிப்புக்கள் என பல காலங்களைக் கடந்து கொண்டிருந்த இணையம் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி தான் வீடுகளில் பயன்படுத்தும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டது. 'மொஸெயிக்' எனப்படும் 'வெப்' பிரவுஸரின் அறிமுகத்தாலேயே இது சாத்தியப்பட்டது.




ஆரம்பத்தில் இந்த வெப் பிரவுஸரினால் குறிப்பிட்ட அளவிலேயே இணைய சேவைகளை பார்வையிடக் கூடியதாக இருந்தது. ஆனால், 16 வருடங்களின் பின்னர் தற்போது பல எண்ணிக்கையிலான வெப் பிரவுஸர்கள் இருப்பது போலவே அவற்றின் மூலம் ஏராளமான இணைய சேவைகளைப் பார்வையிடவும் முடிகின்றது.

'நெட்கிராஃப்ட்' என்ற ஆய்வு நிறுவனத்தின் கணிப்பின்படி 2009 ஓகஸ்ட் மாதத்தை அடைகையில் 226 மில்லியன் இணையத்தளங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது, 22 கோடியே 60 லட்சம் இணையத்தளங்கள் தற்போது பாவனையில் இருக்கின்றனவாம்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 28, 2009.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org